பக்கங்கள் - 16
விலை - 30ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 145 சித்திரை 09ஆம் நாள் திங்கட்கிழமை 22 ஏப்ரல் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

நாடு முழுவதும் ஊரடங்கு 02

இன்று விடுமுறை 10

அவசரமாக கூடுகின்றது நாடாளுமன்று 13

## இலங்கையில் முதல் தடவையாக

# ஐ.எஸ்.ஐ.எஸ்.

# தற்கொலைத் தாக்குதலில் 228 பேர் உடல் சிதறிச் சாவு

- 450க்கும் மேற்பட்டோர் காயம்
- நாடு முழுவதும் திகில் நிலை

கொழும்பு, ஏப்ரல் 22

கொழும்பு; நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நேற்றுக் காலையில் அடுத்தடுத்து நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் மற்றும் குண்டுத் தாக்குதல்களில் 228 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 13



## தாக்குதல் தொடர்பில் முன்னரே எச்சரிக்கை!

கொழும்பு, ஏப். 22

இலங்கையில் தொடர் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறக்கூடும் என்று அரசதேசிய புலனாய்வுச் 13

## தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகத்தில் 13 பேர் கைது

பெண் ஒருவரும் உள்ளடக்கம் குண்டுடன் சென்ற வாகனமும் மீட்பு 11

அவசர அவசரமாகப் பேராயரை சந்தித்த முஸ்லிம் தலைமைகள் பக் 10

## யாழ்.நகரில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 22

கொழும்பில் இடம்பெற்ற 13

## வெளிநாட்டவர் 32பேர் சாவு

கொழும்பு, ஏப். 22

கொழும்பில் நேற்று இடம்பெற்ற தொடர் 13

## பதினொருவரைத் தேடி பொலிஸ் வலைவீச்சு!

கொழும்பு, ஏப். 22

இலங்கையைச் சேர்ந்த 31பேர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் பயிற்சிபெற்று நாடு திரும்பியுள்ளது என்று புலனாய்வுச் சேவை சமர்ப்பித்த பட்டியல் 13

## ஈஸ்ரர் சோபையிழப்பு

கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழா கொண்டாட்டங்கள் வடக்கில் கடந்த ஆண்டுகளை விட இந்த 13

## 10 ஆண்டுகளுக்கு பின்னர் இலங்கையில் மரண ஓலம்

குண்டு ஓசைகளால் அதிர்ந்தது நாடு

கொழும்பு, ஏப். 22

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையிலான உள்நாட்டுப் 09

## குண்டு வெடிப்பில் வவுனியா நபர் சாவு

வவுனியா, ஏப். 22

கொழும்பில் நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதலில் வவு 11

## கட்டுநாயக்காவில் நேற்றிரவும் மீட்கப்பட்டது குண்டு

கொழும்பு, ஏப். 22

கட்டுநாயக்கா பன்னாட்டு 13

## நியூஸிலாந்துப் பள்ளிவாசல் தாக்குதலுக்கு பழிவாங்கலா?

*இந்தக் கோணத்தில் பொலிஸார் விசாரணை*

கொழும்பு, ஏப். 22

நியூஸிலாந்தில் பள்ளிவாசல் மீது இடம்பெற்ற தாக்குதலில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டமைக்குப் 13

## வெளிநபர்கள் விவரம் வடக்கிலும் சேகரிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 22

வடக்கில் பாதுகாப்பைப் பலப்படுத்தி வெளியில் இருந்து 13



## நீர்கொழும்பு தாக்குதல்தாரி ஒளிப்படம் பகிரங்கமானது!

கொழும்பு, ஏப். 22

நீர்கொழும்பு கட்டுவப்பிட்டிய கத்தோலிக்க தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டு தாக்குதலை நடத் 11

# குண்டு வெடிப்புகளின் சூழ்ச்சியை பாதுகாப்புத் துறை விசாரிக்கிறது

## மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என மைத்திரி கோரிக்கை

கொழும்பு, ஏப். 22

குண்டுவெடிப்புக்களின் சூழ்ச்சி என்ன என்பதை ஆராயுமாறு பொலிஸ் புலனாய்வுப் பிரிவு, சிறப்பு அதிரடிப் படையினர், இராணுவம், வான்படை, கடற்படை, உள்ளிட்ட பாதுகாப்புத் துறைகளுக்குப் பணித்துள்ளேன்.

அவர்கள் துரித விசாரணை நடத்துகின்றனர். ஒட்டுமொத்த நாட்டு மக்களும் விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குங்கள் என்று அரசு உங்களைக் கேட்டுக் கொள்கின்றது.

இவ்வாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவரது ஊடகப் பிரிவு நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

நாட்டில் ஏற்பட்டிருக்கும் குண்டுவெடிப்பு துன்பியல் சம்பவத்தையிட்டு வருத்தமடைகிறேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்போது அனைவரினதும் ஒத்துழைப்பே மிக முக்கியமாகத் தேவைப்படுகின்றது என்பதை அரசின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன். நாட்டு மக்கள் என்ற வகையில் அனைவரும் அமைதி காக்கும் அதேவேளை, வதந்திகளை நம்பி உணர்ச்சிவசப்பட்டு செயற்பட வேண்டாம் என்றும் நாட்டு மக்களை கேட்டுக்கொள்கின்றேன். நிலைமையை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கும் நடந்த சம்பவத்தின் பின்னணியைக் கண்டறிவதற்கும் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது என்பதையும் நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (த)

## நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம்!

### உள்நாட்டு வானூர்திச் சேவைகள், தொடருந்து சேவைகளும் இடைநிறுத்தம்

கொழும்பு, ஏப். 22

நாடு முழுவதும் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரும் வரையில் நேற்று மாலையிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் நேற்று அடுத்தடுத்து இடம்பெற்ற பெரிய குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து பாதுகாப்பைக் கருத்தில்கொண்டே நாடு முழுவதும் நேற்று மாலை 3 மணியிலிருந்து ஊடரங்குச் சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

'பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை உடன் நடைமுறைப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்தார்.

இதன்படி, மறு அறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது' என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கையின் அனைத்து உள்நாட்டு வானூர்தி சேவைகளும், தொடருந்து சேவைகளும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்தி சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார். (ஒ.5.22)

## காயமடைந்தோருக்குக் குருதி வழங்க யாழ்ப்பாண இளையோர் முண்டியடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 22

குண்டுவெடிப்பில் படுகாயமடைந்த நூற்றுக்கணக்கானோருக்குக் குருதி தேவைப்பட்டதனால் அவசரஅவசரமாகக் குருதி வழங்க யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையிலும் ஏராளமானோர் முண்டியடித்தனர்.

கொழும்பு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நேற்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். அவர்களுக்கு அவசரமாகக் குருதி வகைகள் தேவைப்படுவதால் அவற்றை வழங்குமாறு கொழும்பு நாரஹேன்பிட்டியிலுள்ள குருதி மத்திய வங்கியினர் அவசர அறிவிப்பு விடுத்தனர். அதனையடுத்து யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் குருதி வழங்க வருமாறு வலைத்தளங்கள் ஊடாகத் தகவல் பரிமாறப்பட்டதும் குண்டு வெடிப்பின் தார்ப்பரியத்தை உணர்ந்த யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஏராளமானோர் குருதித் தானம் வழங்க மருத்துவமனைகளில் குவிந்தனர். யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் நாளாந்தம் சுமார்10 பேர் குருதி வழங்கும் நிலையில் நேற்று மட்டும் நூற்றுக்கும் மேற்பட்டோர் குருதி வழங்கினர். தெல்லிப்பழையில் 15 பேரும் பருத்தித்துறையில் 8 பேரும் நேற்றுக் குருதி வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

நாடு முழுவதும் போதனா மருத்துவமனைகள் உட்பட பல மருத்துவமனைகளுக்கு ஏராளமானோர் குருதி வழங்க முண்டி யடித்தனர். குருதி வங்கிகள் இளையோரால் நிறைந்தன. குருதியும் தாராளமாகக் கிடைத்தன என்று தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்து நேற்றுப்பிற்பகல் குருதி போதுமானது என்று அறிவித்தல் விடுக்கப்பட்டது. (த)

## குண்டுவெடிப்புக்களால் வழிபாடுகள் நிறுத்தம்

கொழும்பு, ஏப். 22

நாடு முழுவதுமுள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் நேற்றுப்பிற்பகல் நடைபெறவிருந்த உயிர்ப்பு பெருவிழா வழிபாடுகள் நிறுத்தப்பட்டன.

நேற்றுக்காலை நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டும் படுகாயமடைந்தமுள்ளனர். இந்த நில்லயில் மாலைநேர வழிபாடுகளை நாடு முழுவதும் நிறுத்துமாறு கொழும்பு பேராயர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, அனைவரையும் அமைதியாகச் செயற்படுமாறு அதிவணக்கத்துக்குரிய கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். (த)

## இன்றும் நாளையும் சிறப்பு விடுமுறை!

### அரசு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 22

நாட்டிலுள்ள பாடசாலைகள், அரச மற்றும் தனியார் பணியகங்களுக்கு இன்று திங்கட்கிழமையும், நாளை செவ்வாய்க்கிழமையும் சிறப்பு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது.

நாட்டில் நேற்று அடுத்தடுத்து இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து பாதுகாப்பைக் கருத்தில்கொண்டே இந்த இரு நாள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று அரசு மேலும் தெரிவித்துள்ளது. (ஒ.5.22)

## யாழ்ப்பாண மாவட்ட மக்கள் பதற்றமடையத் தேவையில்லை

### கட்டளை தளபதி தர்ஷன கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் குண்டு வெடிப்புகள் தொடர்பாக பதற்றம் அடைய தேவையில்லை என்று இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இவர் இது தொடர்பாக விடுத்து உள்ள ஊடக அறிக்கை வருமாறு:

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் குண்டு வெடிப்புகள் தொடர்பாக பதற்றமடையத் தேவையில்லை. அமைதியாகவும், ஆசுவாசமாகவும் இருக்கும் வண்ணம் வேண்டப்படுகின்றனர். இவ்வாறான தருணங்களில் உண்மைக்கு புறம்பான தகவல்கள் பலவும் வேகமாக பரவுவது இயல்பானதுதான். எனவே வீண் வதந்திகளுக்கு பலிக்கடாக்கள் ஆக வேண்டாம் என்றும் கேட்கப்படுகின்றனர்.

பொலிஸ், இராணுவம் ஆகியன யாழ். மாவட்ட மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக எடுத்து தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த விடயத்தில் பொலிஸாருக்கும், இராணுவத்துக்கும் பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஏதேனும் அசம்பாவிதங்கள் உணரப்படுகின்ற பட்சத்தில் உடனடியாக தொடர்பு கொண்டு தகவல் வழங்குமாறும் கோரப்படுகின்றனர். குருநகரில் வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக தகவல் பரவியது. ஆயினும் அவ்வாறு எதுவும் உண்மையில் நடக்கவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ம)

## சமூக வலைத்தளங்கள் தற்காலிகமாக முடக்கம்

### பாதுகாப்புச் சபை கூட்டத்தில் முடிவு

கொழும்பு, ஏப். 22

நாட்டின் பல பாகங்களில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நேற்று இடம்பெற்ற நிலையில், சமூக வலைத்தளங்கள் அனைத்தும் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று இடம்பெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களான முகநூல், மெசன்ஜர், வட்ஸ் அப், வைபர் என்பனவே முடக்கப்பட்டுள்ளன.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் வதந்திகள் பரப்படுகின்றது எனவும், வன்முறைகளைத் தூண்டும் விடும் வகையில் பதிவுகள், காணொலிகள் பரப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டு இவை தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன. (ஒ.5.22)

## பொலிஸாரின் விடுமுறைகள் நிறுத்தம்

கொழும்பு, ஏப். 22

நாட்டில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களையடுத்து பொலிஸாரின் சகல விடுமுறைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

நாடு முழுவதுமுள்ள பொலிஸ் அலுவலர்கள் சகலரும் தத்தமது பொலிஸ் நிலையங்களில் கடமையிலிருக்கவேண்டும் என்று பொலிஸ்மாஅதிபர் அவசர அறிவித்தலை விடுத்துள்ளார். (த)





















## மட்டக்களப்பு சீயோன் தேவாலயம்














## சங்கிரில்லா ஹோட்டல்





## கிங்ஸ்பெரி ஹொட்டல்















நீர்கொழும்பு செபஸ்ரியான்

கொச்சிக்கடை தேவாலயம்



# குண்டுவெடிப்பு அச்சுறுத்தல் ஏற்கனவே எச்சரிக்கப்பட்டது

## அரச தலைவரின் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 22

இலங்கை குண்டுவெடிப்பு அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டது உண்மையென அரச தலைவரின் செயலர் ஹேமசிறி பெர்ணான்டோ தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு தொடர்பாக பல வழிகளில் தயார்படுத்தல்களை மேற்கொண்டிருந்த நிலையில் இந்தக் குண்டு வெடிப்புகள் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் தீவிரவாதக் குழுவொன்று இருப்பதாகவும் தற்கொலை குண்டுதாரிகளே செயற்பட்டுள்ளனர் என்றும் சந்தேகிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக தாம் விசாரணைளை பல்வேறு கோணங்களில் முடுக்கியுள்ளதாகவும் விரைவில் உண்மை வெளிக்கொண்டு வரப்படும் என்றும் கூறினார்.

(ஒ.5)




# உயிரிழக்க சற்றுமுன்னர் குடும்பத்துடன் தம்படம்

## மனதை உருக்கும் சம்பவம்

கொழும்பு, ஏப். 22

கொழும்பில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பிரபல சமையல் கலை நிபுணர் சாந்தா மாயாதுன்னேயும் அவரது மகளும் உயிரிழந்துள்ளனர்.

மாயாதுன்னே தனது குடும்பத்துடன் காலை உணவைச் சாப்பிடும் போது எடுத்த தம்படத்தை (செல்பி) முகநூலில் பகிர்ந்துள்ளார். அவர்கள் ஈஸ்டர் நாள் காலை உணவை அருந்துவதாக அதில் குறிப்பிட்டுள்ளார். இந்த ஒளிப்படத்தை தரவேற்றிய சில நிமிடங்களில் சங்கரில்லா விடுதியில் குண்டு வெடித்துள்ளது. அதில் சாந்தா மாயாதுன்னேயும், அவரது மகளும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

(ஒ.5)

# விடுதலைப் புலிகள்கூட இப்படிச் செய்ததில்லை!

## குண்டு வெடிப்புப் பற்றி முன்னாள் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 22

விடுதலைப் புலிகளுடனான போர்க்காலத்தில்கூட, ஒரே நாளில் இந்த எண்ணிக்கையில் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் பதிவாகவில்லையென்று முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

கொழும்பு கொட்டாஞ்சேனை அந்தோனியார் ஆலயத்தில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பின் பின்னரான நிலைமைகளை அவதானித்த பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமய வழிபாடுகள் நடைபெற்ற இடத்தில் இவ்வாறு தாக்குதல் நடத்தியமை மிலேச்சத்தனமானது. குண்டுவெடிப்புடன் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(த)



# காணாமற்போனோரை தேடிக் கதறிய உறவுகள்

கொழும்பு, ஏப். 22

கொழும்பில் நேற்றுக் காலை ஆலய வழிபாட்டுக்குச் சென்ற பின்னர் வீடு திரும்பாத தமது உறவுகளைத் தேடி மருத்துவமனைகளுக்கு குடும்பத்தினர் படையெடுத்தனர். அவர்கள் தங்கள் உறவுகளைக் காணாது கதறி அழுதனர். இந்தச் சோகச் சம்பவம் கொழும்பு தேசிய மருத்துவமனையில் நேற்று இடம்பெற்றது.

கொழும்பில் ஆலய வழிபாடுகளுக்கு, ஹோட்டல்களுக்கு சென்றவர்கள் வீடு திரும்பவில்லை என்றதும் பதறியடித்து உறவினர்கள் தேடி அலைந்தனர். கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் அவர்கள் சிக்கியிருக்கலாம் என்ற அச்சம் காரணமாக, மருத்துவமனை நோக்கிப் படையெடுத்தனர். மருத்துவமனையில் உயிரிழந்த சடலங்கள், காயமடைந்தவர்கள் சிகிச்சை பெறும் விடுதிகளுக்குள் பதற்றத்துடன் தமது உறவுகளைத் தேடி கண்ணீருடன் அலைந்தனர்.

(ஒ.5)

# பூங்கா, பண்ணைக்கு செல்வதற்குத் தடை


யாழ்ப்பாணம், ஏப். 22

பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற்கொண்டு, யாழ்ப்பாண மாநகர சபை ஆளுகையிலுள்ள பொழுது போக்கு மையங்களான பூங்கா மற்றும் பண்ணை சுற்றுவட்டப் பகுதிகளுக்குச் செல்வதற்குத் தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மற்றும் கொழும்பு மாவட்டங்களில் நேற்று இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்களையடுத்துத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னெச்சரிக்கையாகவே இந்தத் தடை விதிக்கப்படுகிறது என்று மாநகர முதல்வர் இ:ஆனல்ட் தெரிவித்தார். (த-105)

# அநாதரவான குழந்தை மீட்பு



கொழும்பு, ஏப். 22

கொழும்பில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பெற்றோர், பாதுகாவலரைத் தவறவிட்ட குழந்தை ஒன்று மீட்கப்பட்டு கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது.

(ஒ.5)

# சடலத்துக்கு அருகில் கதறிய இளம் பிஞ்சு

## கண்ணீரை வரவழைக்கும் காட்சி



கொழும்பு, ஏப். 22

கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற குண்டுவெடிப்பில் சிதறிய சடலம் ஒன்றின் அருகே சிறுமி ஒருத்தி கதறி அழும் காணொலி வெளியாகியுள்ளது. மனதை உருக்கும் இந்தக் காட்சி பலரது கண்களிலும் கண்ணீரை வரவழைத்துள்ளது.

கிறிஸ்து உயிர்ப்பு பெருவிழாவான நேற்று, தேவாலயங்களில் வழிபாடுகளில் மக்கள் ஈடுபட்டனர். காலையில் புதிய ஆடைகளுடன் சென்று உருக்கமாக வழிபாடுகளில் பங்கேற்றிருந்தனர். கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்திலும் பெருமளவான மக்கள் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. பலர் உடல் சிதறி உயிரிழந்தனர். சடலங்களும் சிதறிக் காணப்பட்டன.

கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயச் சுற்றாடலில் குண்டுவெடிப்பில் உயிரிழந்த சடலத்துக்கு அருகில் சிறுமி ஒருத்தி இருந்து கதறி அழும் காணொலி வெளியானது. அருகிலிருந்த உறவு உயிரிழந்தது தெரியாமல் அந்தச் சிறுமி கதறி அழுத காட்சி பலரது கண்களிலும் கண்ணீரை வரவழைத்தது. (ஒ.5)

# இந்தியத் தூதரகமும் இலக்கு வைக்கப்பட்டதா?

கொழும்பு, ஏப். 22

கத்தோலிக்க தேவாலயங்களில் மட்டுமல்ல கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தையும் தாக்குதல்தாரிகள் இலக்கு வைத்திருந்ததாக அரச தேசிய புலனாய்வுத்துறை முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்ததாக அறியமுடிகின்றது.

இந்த மாத முற்பகுதியில் சிறப்பு அறிவுறுத்தல்களை அரச தேசிய புலனாய்வுத்துறை அரச தலைவர் பாதுகாப்பு பிரிவு, அமைச்சர் பாதுகாப்பு பிரிவு, நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு பிரிவு ஆகியவற்றுக்கு வழங்கியிருந்ததாக சொல்லப்படுகிறது.

(ஒ.5)

# மட்டக்களப்பில் கடந்த செவ்வாய் இடம்பெற்ற குண்டுவெடிப்பு அறிக்கையைச் சமர்ப்பிக்கவும்

## நேற்றைய சம்பவங்களுக்கான வெள்ளோட்டம்தான் அதுவா? பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு அரசதலைவர் உத்தரவு

மட்டக்களப்பு, ஏப். 22

மட்டக்களப்பு காத்தான்குடியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த குண்டுவெடிப்புத் தொடர்பில் முழுமையான விசாரணை அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன பாதுகாப்புச் செயலருக்கு அவசர பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தக் குண்டுவெடிப்பானது, நேற்றைய குண்டுவெடிப்புகளுக்கான வெள்ளோட்டமா என்றுதற்போது சந்தேகிக்க வேண்டியுள்ளது என்று கூறப்படுகிறது.

கொழும்பிலும் மட்டக்களப்பிலும் நேற்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டும் படுகாயமடைந்தும் உள்ளனர். இந்த நிலையிலேயே, மட்டக்களப்பு காத்தான்குடி தாழங்குடா வேடர் குடியிருப்பு பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு அரசதலைவர் பணித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட குண்டுவெடிப்புப் பற்றி விசாரணை நடத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர், பல முக்கிய விவரங்களைத் திரட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்ய மேலதிக விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

ரிமோர்ட் கண்ட்ரோல் ஒன்றின் மூலம் இயக்கப்பட்டு ஸ்கூட்டிரக உந்துருளியின் செஸியில் பொருத்தப்பட்ட குண்டே வெடிக்கச் செய்யப்பட்டுள்ளது என்றும் சுன்னத்துல் அல் - ஜமாத் மற்றும் தௌஹீத் ஜமாத் ஆகிய குழுக்களின் மோதல்களின் எதிரொலியாகவே இந்தக் குண்டு வெடிக்கவைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இது யாரையும் இலக்கு வைக்கப்பட்டதா அல்லது ஒத்திகை செய்து பார்க்கப்பட்டதா என்று அறியும் தீவிர முயற்சியில் இறங்கியுள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவு, குண்டு வெடிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட உந்துருளி சிங்களவர் ஒருவரின் பெயரில் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதையும் கண்டறிந்துள்ளனர்.

ஏற்கனவே வன்முறை ஒன்று தொடர்பில் மாவனெல்லையில் கைது செய்யப்பட்ட ஒரு தரப்புக்கு எதிரான குழுவே இதனைச் செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த குண்டுவெடிப்புப் பற்றி அடுத்த பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் அறிக்கையிடுமாறு அரசதலைவர் பணித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. அரசதலைவர் தற்போது வெளிநாட்டில் உள்ளார்.

(த)

## மட்டக்களப்பில் கடும் சோதனை

மட்டக்களப்பு, ஏப். 22

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பையடுத்து மட்டக்களப்பு நகரில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸார், இராணுவத்தினர், சிறப்பு அதிரடிப் படையினர் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். மட்டக்களப்பு நகரை நெருங்கும் சந்தேகத்துக்கிடமான வாகனங்களையும், நபர்களையும் அவர்கள் சோதனைக்குட்படுத்துகின்றனர். பொதுமக்கள் அச்சத்தில் உறைந்து போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(த)

## நடிகை ராதிகா தப்பினார்

கொழும்பு, ஏப். 22



இந்திய பிரபல நடிகை ராதிகா சரத்குமார் கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பிலிருந்து அதிர்ஷ்டவசமாகஉயிர்பிழைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தேவாலயங்களிலும் கொழும்பிலுள்ள சினமன் கிராண்ட் ஹோட்டல், ஷங்கரிலா ஹோட்டல், கிங்ஸ்பெரி ஹொட்டல் மற்றும் சில இடங்களிலும் குண்டு வெடிப்புகள் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளன. இது குறித்து நடிகை ராதிகா சரத்குமார் ட்விட்டரில் கூறியிருப்பதாவது, இலங்கையில் குண்டுவெடிப்புகள் நடந்துள்ளன. ஹொட்டலிலிருந்து நான் தற்போது தான் சினமன் கிராண்ட் விடுதியிலிருந்து புறப்பட்டேன். நான் புறப்பட்ட சிறிது நேரத்தில் அங்கு குண்டு வெடித்துள்ளது. இதைநம்ப முடியவில்லை, இது அதிர்ச்சி அளிக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

(த-222)



யாழ். நல்லூர்

## மதத் தலங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு

வவுனியா, ஏப். 22

நாட்டில் ஏற்பட்டுள்ள குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து நாடு முழுவதுமுள்ள பெரும்பாலான வழிபாட்டுத் தலங்களில் ஆயுதமேந்திய பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். கொழும்பிலுள்ள தேவாலயங்களிலும் ஏனைய வழிபாட்டுத் தலங்களிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறே கிழக்கிலும், மலையகத்திலும் வடக்கிலும் உள்ள வழிபாட்டுத் தலங்களிலும் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நல்லூர் ஆலயம், யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயம், யாழ்ப்பாண ஆயர் இல்லம் ஆகிய இடங்களிலும் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

(த-110)

see more news in
newuthayan.com

## கிறிஸ்து உயிர்ப்பு வழிபாடு நாடு முழுதும் சோகமானது

தலைமன்னார், ஏப். 22

குண்டு வெடிப்புக்களால், கத்தோலிக்க மக்களால் கொண்டாடப்படும் கிறிஸ்துவின் உயிர்ப்பு வழிபாடுகள் நேற்று வடக்கு உட்பட நாடு முழுவதும் அமைதியானது. சோகம் நிலை கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு, மட்டக்களப்பில் தேவாலயங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது இடம்பெற்ற

குண்டு வெடிப்புக்களால் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். அவர்களின் எண்ணிக்கையின இரட்டிப்பு மடங்கு எண்ணிக்கையானோர் காயப்பட்டுள்ளனர். அந்தச் சோகம் சகல மக்களையும் துயர்த்தில் ஆழ்த்தியிருக்கிறது. பல தேவாலயங்களில் வழிபாடுகள் நிறைவடைந்துவிட்டன. சில தேவாலயங்களில் வழிபாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது குண்டுவெடிப்புச் செய்தி கிடைத்துள்ளது. அதனால் பயம், ஏக்கம் காரணமாகவும் உயிரிழப்புக்கள் காரணமாகவும் நேற்றைய வழிபாடுகள் களையிழந்தது என்று வழிபாடுகளில் கலந்து கொண்டவர்கள் கவலை தெரிவித்தனர். மன்னார் மறைமாவட்டம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

(த-60)

## குருதிக் கண்ணீர் வடித்த மாதா!

கொழும்பு, ஏப். 22



களுத்துறை கட்டுகுருந்த பகுதியிலுள்ள தேவாலயத்திலுள்ள மாதா சொரூபத்தின் கண்ணில் குருதிக் கண்ணீர் வடிந்தது என்று தெரிவிக்கப்படுகிறது. அது நேற்றைய குண்டுவெடிப்புக்கான அறிகுறியா என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இவ்வாறு குருதிக் கண்ணீர் வடிந்தது. அதை அங்குள்ள பலரும் பார்வையிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(த-222)

## கட்டுநாயக்கவில் தீவிர பாதுகாப்பு

கொழும்பு, ஏப். 22

குண்டுத் தாக்குதல்களையடுத்து, கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையம் போர்க்கால நடைமுறை போன்று பாதுகாப்பு பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. பயணிகள், கடும் சோதனைக்குட்படுத்தப்படுகின்றனர். அவர்களின் உடைமைகளும் கடும் சோதனையின் பின்னரே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகிறது.

பயணிகளை வழியனுப்பவருவோர் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. வெளிநாடுகளுக்குப் பயணிக்கவுள்ள பயணிகளைத் தவிர வேறு எவருமே வானூர்தி நிலைய வளாகத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

போர்க் காலங்களில் உள்ள நடைமுறை போன்று அங்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

பயணிகளும் அவர்களுடன் வருபவர்களும் இதனைக் கவனத்தில் கொள்ளவும் என்று அறிவுறுத்தப்படுகின்றனர். வானூர்தி நிலைய பாதுகாப்புத் தலைமை அதிகாரி இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

(த-222)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# உயிர்ப்பு ஞாயிறு தாக்குதல் ஏற்கமுடியாத கொடூரம்

கிறிஸ்தவர்களின் உயிர்த்த ஞாயிறான நேற்றுக் காலையில் இலங்கையை அதிர வைத்திருக்கும் குண்டுத் தாக்குதல்கள் முழு நாட்டையுமே சோகத்திற்குள் மூழ்கடித்துள்ளன. நூற்றுக்கணக்கான அப்பாவிகளின் உயிரை அநியாயமாகப் பறித்திருக்கும் இந்தக் கொடூரத் தாக்குதலை நடத்தியவர்கள் உண்மையில் மனிதர்களாகவே இருக்க முடியாது. மிகமிகக் கண்டனத்துக்குரியது இந்தச் செயல்.

மூன்று தேவாலயங்களும் மூன்று நட்சத்திர சொகுசு விடுதிகளும் இலக்கு வைக்கப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளன. மேலும் இரு இடங்களிலும் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. நேற்று முன்னிரவு வரையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 228 என்று அறிவிக்கப்பட்டிருந்தது. 440 பேர் காயமடைந்திருக்கிறார்கள்.

தற்கொலைத் தாக்குதல்களும் குண்டுத் தாக்குதல்களுமாக இந்த மோசமான, கொடூரமான செயல் அரங்கேறியிருக்கின்றது. நேற்று இரவு வரை இந்தத் தாக்குதல்களுக்கு யாரும் உரிமை கோரியிருக்கவில்லை. தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பினுடைய இலங்கை உறுப்பினர்களே திட்டமிட்டு நடத்தியிருக்கின்றனர் என்று நேற்றுப் பின்னிரவில் தகவல் வெளியானது. வெளிநாடுகளில் பயிற்றப்பட்ட இவர்கள் நடத்திய இந்தத் தாக்குதல் நியூசிலாந்தில் மசூதி மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பழிவாங்கலாக இருக்கலாமா என்கிற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளைத் தொடர்கின்றனர். 13 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர். அவர்களில் ஒருவர் பெண்.

யார் இந்தத் தாக்குதலை நடத்தியிருந்தாலும் என்ன காரணத்துக்காக நடத்தப்பட்டிருந்தாலும் இதனை ஏற்றுக்கொள்ளவோ மன்னிக்கவோ முடியாது. அப்பாவிகளை இலக்கு வைத்து நடத்தப்படக்கூடிய எந்தவொரு தாக்குதலும் மனிதத்தனம் அற்றவை. அதைச் செய்பவர்களும் அவர்களின் எண்ணங்களும் களையப்பட வேண்டியது அவசியம் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை.

அதேநேரம் இலங்கைப் பாதுகாப்புத்துறையினதும் புலனாய்வுத் துறையினதும் செயற்பாடுகளும் அவற்றை வழிநடத்தக்கூடிய அமைச்சர்களின் செயற்பாடுகளும் இந்தப் பின்னடைவுக்குக் காரணம். அவர்களே இந்தத் தாக்குதலுக்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, இராணுவத்தினரால் அச்சுறுத்தல் என்று கருதினால் வடக்கில் உள்ள மக்களை அந்த இடங்களில் இருந்து அகற்றி வேறு இடங்களில் குடியிருத்த வேண்டும் என்று வீறாப்புப் பேசும் பாதுகாப்பு நிழல் அமைச்சர் ருவான் விஜேவர்தன, இந்தப் புலனாய்வு ஓட்டைகளுக்குப் பொறுப்பேற்றுப் பதவி விலக வேண்டும். மக்களின் தேவையையும் பாதுகாப்புத் தேவையையும் புரிந்துகொள்ள முடியாத, நாட்டின் பாதுகாப்பு என்ன என்பதையே விளங்கிக்கொள்ளாத ஒருவர் அமைச்சராக இருப்பதிலும் பார்க்க இல்லாமல் இருப்பதே மேலானது. எனவே அவர் பதவி விலகிச் செல்வது இனிவரும் காலங்களிலாவது இத்தகைய குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்த உதவும்.

அதேநேரம், நாட்டில் நிலவும் இன, மத முரண்பாடுகளுக்குத் தீர்வு காணாமல் இழுத்தடித்து நிரந்தர அமைதியை ஏற்படுத்தத் தவறிய அரசதலைவர், தலைமை அமைச்சர் முதற்கொண்டு இன்றைய நாடாளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களும்கூட இந்தப் படுகொலைகளுக்குப் பொறுப்பானவர்களே! தங்களிடையிலான அரசியல் வேற்றுமைகளைக் களைந்துவிட்டு நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் இனிமேலாவது இவர்கள் உள்ளச் சுத்தியோடு ஈடுபட வேண்டும். எதனையும் வரமுன் காப்பதே சிறந்தது! வந்த பின்னர் நோவதில் எந்தப் பயனும் இல்லை.

# குண்டுவெடிப்புத் தொடர்பில் விசாரிப்பதற்குத் தனிக்குழு

கொழும்பு, ஏப். 22

வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகளை நடத்த உயர் நீதிமன்ற நீதியரசர்கள் இருவரின் தலைமையில் குழு வொன்றினை அரசதலைவர் நியமித்துள்ளார். இந்த குழு இரண்டு வரங்களில் தாக்குதலின் பின்னணி மற்றும் காரணம் தொடர்பிலான அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)

# மைத்திரி, ரணிலுடன் நரேந்திரமோடி பேச்சு

கொழும்பு, ஏப். 22

தொடர் குண்டுத் தாக்குதல்களையடுத்து இலங்கையின் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் இந்திய தலைமை அமைச்சர் நரேந்திரமோடி தொலைபேசியில் தொடர்புகொண்டு நிலைமைகள் பற்றிப் பேசியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

குண்டுவெடிப்பில் நூற்றுக்க ணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைவிட படுகாயமடைந்தவர்களின் எண்ணிக்கை மிக அதிகம். இந்த நிலையில் நரேந்திரமோடி தொலைபேசியில் கலந்துரையாடியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (கு)

# இலங்கைத் தாக்குதலைக் கண்டிக்கின்றார் பாப்பரசர்



உரோம், ஏப். 22

இலங்கையில் நடத்தப்பட்ட தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்று பரிசுத்த உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்தார்.

வத்திக்கானில் நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிர்த்த ஞாயிறு திருப்பலியை ஒப்புக்கொடுத்து உரையாற்றியபோதே பாப்பரசர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் இன்று (நேற்று) இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்கள் வேதனையையும், துக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக கிறிஸ்தவர்கள் உயிர்த்த ஞாயிறு பண்டிகையை கொண்டாட ஆலய வழிபாடுகளில் ஈடுபட்டபோது இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டமை வருத்தமளிக்கின்றது. இது கொடூரமான வன்முறை - என்றார். (ம)

## முப்படைகளை கட்டுப்படுத்திய விளைவு அப்பாவி மக்களை இன்று பாதித்துள்ளது

### மகிந்த இப்படிக் கருத்து

கொழும்பு, ஏப். 22

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த அளப்பரிய சேவையாற்றிய புலனாய்வுப் பிரிவினர், முப்படையின் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் பிரிவின் முக்கிய தரப்பினரை அவமதித்து கட்டுப்படுத்தியதன் விளைவு அப்பாவி மக்களை பாதித்துள்ளது என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

நாட்டில் எதிர்பாராத விதத்தில் இடம்பெற்றுள்ள குண்டு வெடிப்புக்கள் கடந்த கால நினைவுகளை மீட்டியுள்ளன.

இந்தச் சம்பவங்கள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கன. நாட்டில் தற்போது உள்ள தேசிய பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல்கள் தொடர்பில் அரசே முழுப் பொறுப்பினையும் ஏற்க வேண்டும்.

தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு கட்சி ரீதியிலற்ற அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஒரு நாளில் இடம்பெற்ற கோர சம்பவம் பெரிய இழப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான இக்கட்டான நிலையில் பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

பாதுகாப்பினை பலப்படுத்த தற்போது அரசு முன்னெடுக்கும் ஏற்பாடுகளுக்கு பொதுமக்களும் முழுமையான ஒத்துழைப்புடனும் ஒருமைப்பாட்டுடனும் செயற்பட வேண்டும் - என்றுள்ளது. (ம)

# தாக்குதல்கள் நடத்தியோரை ஒன்றிணைந்து எதிர்ப்போம்

## த.தே.கூட்டமைப்பு அறைகூவல்

யாழ்ப்பாணம், ஏப்.22

கொழும்பிலும், மட்டக்களப்பிலும் உள்ள தேவாலயங்கள் மற்றும் விடுதிகளைக் குறிவைத்து நடத்தப்பட்ட பயங்கரத் தாக்குதல்கள் எங்கள் சிலர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் அல்ல. எங்கள் அனைவர் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலே.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் உள்ளதாவது:

இலங்கையில் பல்வேறு இன, மதத்தினர் ஒன்றாகச் சமாதானமாக வாழ்வதை மேலும் குலைப்பதற்கென்றே இத்தகைய மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதலை நடத்துவோரின் பாதகமான நோக்கத்தையும், அதை ஒழுங்கு செய்தோரையும் எதிர்த்து நிற்குமாறு அனைத்து இலங்கையர்களுக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

ஈஸ்டர் தினமானது இறுதியில் அன்பும், நன்மையும் வெற்றிபெறும் பயம் மற்றும் வெறுப்பின் இடையூறுகள் நிலைபெறாது என்பதை நினைவுபடுத்தும் ஒரு தினமாகும். இன்று தம் அன்புக்குரியவர்களை இழந்தவர்கள் மற்றும் காயப்பட்டோருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (எ)

## ஈரைந்து விழிகளுடன் ஐந்தாண்டு

**கண்ணகைப்பிள்ளை மயில்வாகனம்**

திதி:- சித்திரைமாத சங்கடஹர சதுர்த்தி (22.04.2019)



தோற்றம் 13.10.1924 — மறைவு 19.04.2014

அன்புத் தெய்வமே,
ஆண்டுகள் ஐந்து போனது அம்மா,
எங்களுடன் வாழ்ந்த அழகிய
நினைவுகளும்
தங்கள் அன்பும் எம்மை வழிநடத்திச்
செல்லும் தங்களை நேரில் காண
இயலாது இருப்பினும் நீங்கள்
எப்போதும் எம்முடனே
வாழ்கிறீர்கள்

**மகன் குடும்பத்தினர்.**
இல.14ப, பரமேஸ்வராச்சந்தி,
திருநெல்வேலி.

(CS24865)(11.17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**கதிரவேலு தம்பிராசா**

திதி: திருதியை

தோற்றம் 04.04.1955

மறைவு 02.05.2018


வருடங்கள் ஒன்றென்ன ஆயிரங்கள் சென்றாலும் ஆறாது எம் மனம்
காலங்கள் நகரலாம் கண்ணீரும் கவலையும் ஆறாது என்றும்
நிலையற்ற மனித வாழ்வை முடித்து நித்தியமான வாழ்வதற்கு சென்றீரே
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கருகம்பனை,
கீரிமலை.

**மனைவி, மகள்,
குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

**நடராசா இராசேந்திரன் (இந்திரன்)**



அளவெட்டி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா இராசேந்திரன் நேற்று (21.04.2019) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - திருப்பதி தம்பதியினரின் அன்பு மகனும் ஜெகதீஸ்வரியின் (ஈஸ்வரி) அன்புக்கணவரும் ராஜி (ஆசிரியர்), பிரதாஸ், தாட்சாயினி, ஆர்த்தி ஆகியோரின் அருமை தந்தையாரும் நாகவரன் (தேசிய சேமிப்புவங்கி - கொடிகாமம்) றமேஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் நாகேந்திரன், கலாவதி, உருத்திரன், பகீரதன், ஆகியோரின் சகோதரனும் ஹாருண்ஜன், சந்தோசிகா, வைணாஷ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2019) திங்கட்கிழமை தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 01.00 மணியளவில் மணல்பிட்டி மயானத்தில் விதைக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 220 8236 — தகவல்: குடும்பத்தினர்

## பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

எமது பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் 28.04.2019 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணியளவில் தொண்டர் சபைக் காரியாலயத்தில் இடம்பெற உள்ளது.
அத்தருணம் ஆரம்பகால உறுப்பினர்கள் உட்பட அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொண்டு தங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஒத்தாசைகளையும் தந்துதவுமாறு தயவாக வேண்டி நிற்கின்றோம்.

அளவெட்டி,
கும்பளாவளைப் பிள்ளையார் கோயில்
தொண்டர் சபை
**நிர்வாகம்.**

## துயர் பகிர்கின்றோம்

யாழ். மாவட்ட வழிகாட்டி ஆணையாளராக இருந்த கொக்குவில் இந்து இளைப்பாறிய பிரதி அதிபர்



**திருமதி சிவநேசரத்தினம் குணரத்தினம்**

அவர்களின் மறைவு செய்திகேட்டு துயரடைந்தோம் அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு வடமாகாண பெண் சாரணீய சங்கம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

வடமாகாண பெண் சாரணீய ஆணையாளர்
திருமதி நீலா தர்மகுலசிங்கம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**கணபதிப்பிள்ளை பத்மநாதன்**
(ப.க.பத்மநாதன்)

தோற்றம் 19.07.1946

மறைவு 23.03.2019

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு எமக்கு பல்வேறு வழிகளில் உதவியும், ஆறுதலும் அளித்த அனைவருக்கும், நேரிலும், தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (22.04.2019) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளையார் கோயிலடி,
சித்தங்கேணி.

பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**இராமலிங்கம் பிரபாகரன்**

தோற்றம் 02.02.1978

மறைவு 13.05.2009

இறையடி சேர்ந்து
ஈரைந்து ஆண்டு சென்றாலும்
என்றும் எமக்கு பக்கபலமாக இருக்கும்
உங்களுக்கு எம் இதய அஞ்சலிகள்

**மனைவி, மகள்,
உறவினர்கள்.**

(CS 00796) (14.17)

### 10...

போர் 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருந்த பின்னர் இலங்கையில் தொடர் குண்டு வெடிப்புக்களோ, தற்கொலைத் தாக்குதல்களோ நடைபெறவில்லை.
போர் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டு 10 ஆண்டுகள் நெருங்கும் நிலையில், இலங்கையில் 8 இடங்களில் குண்டுத் தாக்குதல்கள், தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தத் திடீர் குண்டுத் தாக்குதல்களில் சிக்கி 228பேர் உயிரிழந்துள்ளனர். 450 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.
இலங்கை 10 ஆண்டுகளின் பின்னர் குண்டு வெடிப்புக்களால் அதிர்ந்துள்ளதாக பன்னாட்டு ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன. இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்துக்கு பன்னாட்டு ஊடகங்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளன. (ஓ.5)

## மரண அறிவித்தல்



மலர்வு 30 . 05 . 1937 — உதிர்வு 21 . 04 . 2019

**சபாபதிப்பிள்ளை சிவப்பிரகாசம்**

வியாபாரிமூலை பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை சிவப்பிரகாசம் நேற்று (21.04.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துரத்தினத்தின் அன்புக் கணவரும் பவானி, நகுலேஸ்வரன், பிருந்தா, நிவேதிகா, சந்திரிகா, சுகந்தி, வசந்தி, வசந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவராஜா, சூரியமதி, காலஞ்சென்ற துரைச்சாமி மற்றும் சிவஞானசுந்தரம், சிவகுமார், கணேஸ்வரன், யோகநாதன், சர்மிலா ஆகியோரின் அன்பு மாமனாரும் கோபிசங்கர், சிவசங்கர், லிகன்யா, பிங்கலன், சிந்துஜன், மதுஷன், தரணியன், சாருஜன், சுஜன், பிரகாஷ், நிருஷன், சஞ்சயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2019) திங்கட்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயாத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வியாபாரி மூலை
பருத்தித்துறை

தகவல்:
**குடும்பத்தினர்.**

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 26.03.2019 செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்த

**அமரர் கணேஷ் இரத்தினகோபால்**
(கண்ணா எள்ளுப்பா உரிமையாளர்)

அவர்களின் கிரியை நாளை (23.04.2019)
செவ்வாய்க்கிழமை காலை 8.00
மணியளவில் கீரிமலை
புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று
தொடர்ந்து 25.04.2019 வியாழக்கிழமை
நண்பகல் 12.00 மணியளவில் எமது
இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நவாலி வீதி, 2 ஆம் ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.
(மூத்த நைனார் கோயிலடி, ஆனைக்கோட்டை)

குடும்பத்தினர்.

(CS 24866)(14.17)

ஒரு பெண்ணாக பொதுச் சேவையை நாடும்போது,

பொது அதிகாரி உங்களிடம் இலஞ்சம் கேட்கிறாரா?

குறித்த சேவையை பெறுவதாயின் பாலியல்
செயல்களை செய்யும்படி உங்களிடம் கோருகிறாரா?

அப்படியானால், அது

**பாலியல் இலஞ்சம்**

இலங்கையில் பாலியல் இலஞ்சம்
பெறல் தண்டனைக்குரிய குற்றமாகும்

பாலியல் இலஞ்சத்திற்கு எதிரான இலவச
சட்ட ஆலோசனைகள் மற்றும் உதவிகளுக்கு அழையுங்கள்

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

**077 340 6212**

நாடு பதற்றநிலையில்

## குருநகரில் வெடியைக் கொழுத்திய விசமிகள்

யாழ்ப்பாணம், ஏப். 22
நாட்டில் பதற்றமான சூழல் நிலை தொடருகின்ற போது யாழ்ப்பாணம் குருநகர் மரியன்னை தேவாலயத்துக்கு அருகே வெடி கொழுத்தப்பட்டதால் பதற்றம் ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
மரியன்னை தேவாலயத்தில் வழிபாடுகள் இடம்பெற்றவேளை அங்கிருந்த சிலர் தேவாலயத்துக்கு வெளியே பட்டாசு கொழுத்தினார்கள் என்று பொலிஸார் மேலும் கூறினர். (ஒ.5)

## ஊரடங்கு அறிவிப்பால் மக்கள் பெரும் அவதி

யாழ்ப்பாணம், ஏப். 22
குண்டுத் தாக்குதல்களால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர், மக்கள்தமது அன்றாட தேவைகளை நிறை வேற்றிக் கொள்வதற்கு அவதிப்பட்டனர். முண்டியடித்துக் கொண்டிருந்தனர்.
நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலையடுத்து பொலிஸ் ஊரடங்கு மாலை 6 மணி முதல் இன்று காலை 6 மணி வரை நடைமுறையில் இருக்கும் என்று பாதுகாப்பு தரப்பு அறிவித்திருந்தது. எனினும் அது பிற்பகல் தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது என்று பின்னர் அறிவிக்கப்பட்டது.
இதனாலேயே தமது அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவர்கள் முண்டியடித்தனர்.
நகர பொது இடங்களில், பொதுக் கிணறுகளில் குடிதண்ணீர் பெறுவோர் போத்தல் மற்றும் பரல்களுடன் வரிசையில் முண்டியடித்துக்கொண்டிருந்தனர். வழமைக்கு மாறாக நேற்று அதிக பரல்களில் அவர்கள் தண்ணீர் நிரப்புவதில் ஈடுபட்டதனையும் அவதானிக்க முடிந்தது.
எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் முண்டியடிப்புக்குக் குறைவிருக்கவில்லை. தமது வாகனங்களுக்கு அதிக எரிபொருள் நிரப்ப வரிசையில் காத்திருந்திருந்தனர்.
பலசரக்கு விற்பனை செய்யும் கடைகள் மற்றும் வெதுப்பகங்களில் கூட்டம் அலை மோதியது. பாண், பிஸ்கட் மற்றும் உணவுப் பொதிகளை அதிகளவில் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டிருந்தனர். நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் அதிகமான கடைகள் பூட்டியநிலையில் காணப்பட்டன. திறந்திருந்த கடைகளில் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் மக்கள் முண்டியடித்தனர். அந்தக் கடைகளில் மக்கள் கூட்டம் அதிகமாகவே இருந்தது. (த-7,23)

# இதுபோன்ற துன்ப அனுபவம் எமக்கு வேண்டவே வேண்டாம்

## யாழ் ஆயர் உருக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 22
உயிர்ப்பு பெருவிழா தினத்தில் இலங்கை நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களால் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம். இறந்த அனைவரும் அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்திருப்பினும் இறைவனின் இன்ப சந்நிதானத்தில் இளைப்பாற இறையருள் வேண்டுகிறோம் என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை.

தனது இரங்கல் குறிப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
இந்த நிகழ்வுகளால் காயப்பட்டும் இழப்பால் வேதனைப்பட்டும் துடிக்கும் அனைவரின் துன்பத்தில் நாமும் முழுமையாக பங்கெடுத்து அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம். துன்பத்தில் துடிக்கும் குடும்பத்தினருடன் நாமும் செபத்தில் இணைந்திருக்கிறோம். இறைவனே இவர்களோடு இருந்து இத்துன்ப அனுபவங்களை தாங்க துணை புரிவாராக. இவர்களின் துன்பத்தை இறைவனே அமைதிப்படுத்த வேண்டும்.
கடந்த மூன்று தசாப்த கால போரின் பின்னர் அரசியல் நோக்கம் கொண்டு நடத்தப்பட்டது என்றும் குறிப்பாக கிறிஸ்தவ மதத்தினரை நோக்கி நடத்தப்பட்டவை என்றும் எண்ணப்படும் இந்த தாக்குதல்கள் அர்த்தமற்றவை. இந்தத் தாக்குதல்களை மிகவும் கடுமையாக கண்டிக்கிறோம். இதில் ஈடுபட்டவர்கள் யாராயினும் அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு உரிய விதமாக தண்டிக்கப்பட வேண்டும். இதில் அரசு இதய சுத்தியுடன் செயற்பட்டு நீதியையும் அமைதியையும் உடன் நிலைநிறுத்தி இது போன்ற சம்பவங்கள் இனி ஒருபோதும் நிடைபெறாது என்பதை உறுதி செய்ய வேண்டும் என்று வேண்டுகிறோம்.
இலங்கை மண் இது போன்ற துன்ப அனுபவங்களை மிக அதிகமாகவே அனுபவித்துள்ளது. இனியும் இது போன்ற துன்ப அனுபவங்கள் எமக்கு வேண்டவே வேண்டாம் என சம்பந்தப்பட்ட அனைவரிடமும் மிகமிக அன்பாக வேண்டுகிறோம். தனிப்பட்ட அரசியல் அல்லது வேறு இலாபங்களுக்காக மனித உயிர்களுடன் விளையாடாதீர்கள். இதில் ஈடுபட்டவர்களே இறைவன் உங்களுக்கு உரிய தீர்ப்பு தருவார் என்பதை மறக்காதீர்கள். இதனால் நாட்டின் பொருளாதாரம் சுற்றுலாத்துறை, அமைதி பாதுகாப்பு என்பன கேள்விக்குறியாக்கப்பட்டு மக்களின் இயல்பு வாழ்வு என்பனவே பாதிப்படையும்.



இன மத தேசிய ஒற்றுமையையும் பாதுகாப்பையும் உடன் நிலை நிறுத்த அரசிடமும் சம்மந்தப்பட்ட அனைவரிடமும் மிக அன்பாக வேண்டுகிறோம். நாம் அனைவரும் பதட்டமடையாது அமைதியாக இருந்து நாட்டில் அமைதி மிக விரைவாக நடைமுறைப்படுத்தப்பட செபிக்க வேண்டும் என அழைப்பு விடுக்கிறோம். இறைவன் இலங்கை மக்களோடு என்றும் துணை நின்று பாதுகாத்து வழி நடத்துவாராக - என்றுள்ளது. (ம)

பயங்கரவாதத் தாக்குதல்

## ஐ.நா. பொதுச்செயலர் குத்தேரஸ் கண்டனம்

வொஷிங்டன், ஏப். 22
இலங்கையில் நடத்தப்பட்ட தாக்குதல் பயங்கரவாதத் தாக்குதல் என்று தெரிவித்தார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் அன்டனியோ குத்தேரஸ்.



தனது கண்டன அறிக்கையில், 'புனிதமான நாளொன்றில் இலங்கையில் கத்தோலிக்கர்கள், கிறிஸ்தவர்கள், கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் வருந்தத்தக்கது. இந்தக் கடினமாக காலப்பகுதியில் இலங்கை மக்களுடன் இணைந்திருப்போம் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளோர். (ம)

## இன்று விடுமுறை

வடமாகாண பாடசாலைகள் உள்ளிட்ட நாட்டின் அனைத்து பாடசாலைகளுக்கும் கல்வியமைச்சால் இன்றும், நாளையும் விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில் வடமாகாண சபைக்கு உட்பட்ட அனைத்து மாகாண அரச அலுவலகங்களுக்கும் இன்றுதிங்கட்கிழமை விடுமுறை வழங்குவதற்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் பணிப்புரை விடுத்துள்ளார். (ஒ.5)

## ஈஸ்ரர் கொண்டாட சென்று மகனை இழந்த பெற்றோர்

கொழும்பு, ஏப். 22
கிறிஸ்துவின் உயிர்ப்பு பெருவிழாவான ஈஸ்ரரைக் கொண்டாட ஹோட்டலுக்கு பெற்றோரை அழைத்துச் சென்ற மகன் உயிரிழந்த பரிதாபம் நேற்று இடம்பெற்றுள்ளது. மகனை இழந்த துயரத்துடன் பெற்றோர் கதறி அழுதனர். கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட மகனின் சடலத்தை கட்டிப் பிடித்து பெற்றோர் அழுத காட்சி எல்லோரையும் கண்கலங்க வைத்தது. (ஒ.5)

## முஸ்லிம் தலைமைகள் பேராயரிடம் வருத்தம்

தொடர் குண்டு வெடிப்புக்களையடுத்து, முஸ்லிம் அரசியல் தலைமைகளும் முஸ்லிம் மதத் தலைவர்களும் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை நேற்று ஓடோடிச் சென்று சந்தித்துப் பேசியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அது பற்றிய ஒளிப்படங்களும் வெளியாகின.
குண்டுத் தாக்குதல்களில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டும் படுகாயமடைந்துமுள்ள நிலையில், அவற்றுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புத்தான் காரணம் என்று பொலிஸ்மா அதிபர் நேற்றிரவு பாதுகாப்புப் பற்றிய முக்கிய கூட்டமொன்றில் அறிவித்துள்ளார். எனினும் அதற்கு முன்னரே ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புத் தொடர்புபட்டுள்ளதாகத் தகவல்கள் பரவிக்கொண்டிருந்தன. ஆட்சியைக் கைப்பற்ற ஒக்ரோபர் அரசியல் சதி போன்று இதுவும் சதியா என்றும் தகவல்கள் பரவியநிலையில், பேராயரை ஓடோடிச் சென்று சந்தித்துள்ளனர். குண்டுத் தாக்குதல் சம்பவங்களுக்குக் கவலை தெரிவித்த அவர்கள், கண்டனமும் வெளியிட்டனர். சந்திப்பில் மூத்த அரசியல்வாதி பௌஸி, அமைச்சர்களான ரவூப் ஹகீம், ரிஷாட் பதியுதீன், கபீர் ஹாஷிம், நாடாளுமன்ற உறுப்பினர்களான மரைக்கார், முஜிபுர் ரஹ்மான் மற்றும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தலைவர் ரிஸ்வி முப்தி உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## பாடசாலைகள் இரு நாள்களுக்கு மூடப்படுகின்றது

கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 22
நாட்டின் அனைத்துப் பாடசாலைகளும் இன்று திங்கட்கிழமை மற்றும் நாளை செவ்வாய்க்கிழமையும் மூடப்படுவதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அறிவித்துள்ளார்.
இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில் இந்த சிறப்பு விடுமுறையை கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார். 8 இடங்களில் இன்று நடத்தப்பட்டகுண்டுவெடிப்புகளை அடுத்து ஏற்பட்டுள்ள பதற்ற நிலையால் இந்த விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## பொதிகள் கொண்டு செல்வதற்குத் தடை

கொழும்பு, ஏப். 22
அனைத்துப் பயணிகளும் தொடருந்து, தனியார் போக்குவரத்து பேருந்துகள்களில் பொதிகளை கொண்டு செல்லத் தற்காலிகமாக தடைவிதிக்கப்பட்டுள்ளது.
தனியார் தொடருந்து உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.
கொழும்பு உள்ளிட்ட பல இடங்களில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தையடுத்து பயணிகளின் பாதுகாப்பு கருதியே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, தனியார் பேருந்துகள் பொதிகளை பொறுப்பேற்க வேண்டாமென்றும் சாரதிகள், நடத்துநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.
தொடருந்துப் பொதிகளை பொறுப்பேற்பது நிறுத்தப்பட்டுள்ளதாக தொடருந்து நிலைய பொதுமுகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ தெரிவித்தார். (ஒ.5)

# நாம் ஒன்றிணைந்து பலமாக நிற்போம்

## சம்பந்தன் அறைகூவல்

தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் கோழைத்தனமானவை, துக்ககரமானவை என்று எச்சரித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். நாட்டையே உலுக்கிய நேற்றைய தாக்குதல்கள் தொடர்பில் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: இன்று (நேற்று) கொழும்பிலும் மட்டக்களப்பிலும் உள்ள தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களை குறிவைத்து நடத்தப்பட்ட கோழைத்தனமான தாக்குதல்களையிட்டு நான் மிகவும் கவலையடைந்துள்ளேன். இந்தச் சம்பவங்களுக்கு காரணமானவர்களை அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசதலைவரிடமும், தலைமை அமைச்சரிடமும் கோரிக்கை விடுகின்றேன். இந்தக் கோழைத்தனமான, துக்ககரமான தாக்குதல்களில் தம் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுடன் இணைந்து நிற்குமாறு இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் அழைப்புவிடுகின்றேன். இத்தகைய கடும்போக்காளர்கள் இந்த நாட்டினை பின்னிட்டு கொண்டு செல்லக்கூடாத படி, நாம் ஒன்றிணைந்து பலமாக நிற்போம் என்றுள்ளது. (ம)

## வன்முறைகள் அனைத்தும் களையப்படுதல் வேண்டும்

### வடக்கு ஆளுநர் கண்டனம்



கொழும்பு, ஏப். 22

வன்முறையாளர்கள் அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். வன்முறைகளை எந்த சமூகத்தினாலும் ஏற்றுக்கொள்ள முடியாது என வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை கண்டிக்கும் வகையில் நேற்று அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கொழும்பில் மத வழிபாட்டுத் தலங்களிலும், ஹோட்டல்களிலும் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கான கண்டனத்தையும், குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் நடைபெற்ற துக்ககரமான அசம்பாவிதங்களால், கிறிஸ்தவ மக்கள் ஆழ்ந்த துக்கத்தில் இருக்கின்றார்கள். வன்முறை எந்த சமூதாயத்தினாலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஏற்றுக்கொள்ளக்கூடாத யுக்தி. வடமாகாண மக்கள் வன்முறையினால் வாழ்க்கையில் பல அனுபவங்களைப் பெற்றவர்கள். இன்று நடைபெற்றுள்ள இந்த இருளான நாளைமுன்னிட்டு மன வருத்தம் அடைவதுடன், வன்மையாக கண்டிக்கின்றோம்.

இவ்வாறான வன்முறைச் சம்பவங்களுக்குப் பின்னால் உள்ளவர்களை அடையாளம் கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். சமாதானத்தை மீண்டும் இழக்க தயாராக இல்லை. எனவே, அரச தலைவர் தலைமை அமைச்சர் உடனடியாக இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ம-106)

## சூத்திரதாரிகளை இனங்கண்டு உடன் கைது செய்வது அவசியம்

### சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி.கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்.22

கொழும்பில் நேற்று நடந்த குண்டுத் தாக்குதல்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் உள்ளதாவது:

தேவாலயங்களில் பெரியோர்கள்,சிறுவர்கள் பலரும் கூடி ஆராதனை நடந்துகொண்டு இருந்த நிலையில் எவரும் எதிர்பாரத வண்ணம் குண்டுத்தாக்குதலை நடத்தி இன்று பலர் உயிரிழந்தும், காயப்பட்டும் அல்லல் படும் உறவுகளுக்காக இறைவனை வேண்டுகின்றேன்.

அரசு உடனடியாக இந்தக் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகளை இனம் கண்டு தக்க தண்டனை வழங்கவேண்டும். இது போன்ற சம்பவங்கள் நாட்டின் இறைமைக்கும் மத சுதந்திரத்துக்கும் கடும் பாதிப்புக்களை உருவாக்கும். இது திட்டமிட்ட தாக்குதல் சம்பவமாகும். இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாது இருக்க தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை நான் வன்மையாக கண்டிக்கின்றேன். என்றுள்ளது. (எ)

## சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் நேரத்தில் பெரியதொரு அவலம்

### காதர் மஸ்தான் கவலை

யாழ்ப்பாணம், ஏப். 22

நாட்டில் போர் முடிவுக்கு வந்து மக்கள் சில ஆண்டுகளாக சுதந்திரக் காற்றை சுவாசித்துக் கொண்டிருக்கும் நிலையில், தொடர் குண்டு வெடிப்பு இடம்பெற்றது கவலைக்குரியது. இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.



'கத்தோலிக்க ஆலயங்கள் மற்றும்நட்சத்திர விடுதிகள் மீது நடாத்தப்பட்ட மிருகத்தனமான கொடூர தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதுடன் கொலையாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி அதிகபட்ச தண்டனையை வழங்குவதன் மூலம் மனிதகுலத்தின் எதிரிகளுக்கு பாடம் கற்பிக்க முடியும். அப்பாவி கத்தோலிக்க மக்களை குறிவைத்து நடத்தப்பட்ட கொடிய தாக்குதல்கள் எமது மனங்களில் ஆறாத வடுவை ஏற்படுத்தி உள்ளது. இன்றைய துயரமான பொழுதில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிகளுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் காயமுற்றோர், உறவுகளை இழந்தோருக்காக எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

## நாட்டை சின்னாபின்னமாக்க சில குழுவினர் சதித் திட்டம்

### தென்னிந்திய திருச்சபை கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்.22

கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும், கொழும்பிலும் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களுக்குத் தென்னிய திருச்சபை கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

பேராயர் வண. கலாநிதி டானியல் தியாகராஜா விடுத்துள்ள அறிக்கையிலேயே கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

இன்று (நேற்று) உலகமெங்கும் கிறிஸ்தவர்கள் கிறிஸ்து மரணத்தில் இருந்து உயிர் பெற்றெழுந்ததைக் கொண்டாடும் ஈஸ்டர் தினமாகும். இதனூடாக மானுட வாழ்வின் மரணங்களில் இருந்து மக்களுக்கு எப்போதும் விடுதலை உண்டு என்ற உண்மை அனைவருக்கும் கொடுக்கப்படுகிறது.

இந்தப் புனிதமான நாளில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள், அதிலும் குறிப்பாக மூன்று தேவாலயங்களில் இவை மேற்கொள்ளப்பட்டமை கோழைத்தனமான ஒரு செயலாகும். விடுதிகளில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் ஒருவேளை திசை திருப்பும் செயலாகவும் இருக்கலாம்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவர்கள் கொண்டாடிய குருத்தோலைத் திருநாளாகும். அந்த நாளில் சில விசமிகள் அநுராதபுரத்தில் உள்ள மொதடிஸ்த தேவாலயத்தைக் குறிவைத்துக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

பன்மைத்தன்மை நிறைந்த இலங்கை தேசத்தில் அந்தச் சிறப்பு அம்சத்தைக் குலைத்து, மதக் காழ்ப்புணர்ச்சியைத் தோற்றுவித்து அதனூடான எமது அழகிய நாட்டைச் சின்னாபின்னமாக்க சில குழுவினர் அரசியல் காரணங்களுக்காகவோ அல்லது மதக் காரணங்களுக்காகவே அல்லது வேறு காரணங்களுக்காகவோ இதனை மேற்கொண்டமை தென் இந்தியத் திருச்சபை யாழ்ப்பாணம் போராயம் வன்மையாகக் கண்டிக்கின்றது. என்றுள்ளது. (எ)

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்..

### தாக்குதலுடன்...

கொழும்பு, ஏப். 22

இலங்கையை அதிரவைத்த தொடர் குண்டு வெடிப்புக்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 13 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் பெண். அனைவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் குண்டு கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்டது என்று கூறப்படும் வாகனத்தையும் பொலிஸார் வெள்ளவத்தையில் வைத்து மீட்டுள்ளனர்.

இலங்கையில் நேற்று 7 இடங்களில் குண்டு வெடிப்புத் தாக்குதல் இடம்பெற்றது. 6 இடங்களில் ஒரே நேரத்திலும், ஒரு இடத்தில் மதியமும் குண்டுவெடிப்புத் தாக்குதல் இடம்பெற்றது. பல சம்பவங்கள் தற்கொலைத் தாக்குதல் என்று தெரியவருகின்றது. தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸ் குழுக்கள் மற்றும்முப்படையினர்துரிதவிசாரணையில் குதித்தனர்.

தாக்குதல் இடம்பெற்ற இடங்களுக்கு அண்மையாகவுள்ள மறை காணிகள் (சி.சி.ரி.வி.) சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. கிங்ஸ்பெரி ஹோட்டலில் குண்டு வைத்தார் என்று நம்பப்படும் நபர் தொடர்பில் பொலிஸார் தகவல்களைத் திரட்டியுள்ளனர். மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கொழும்பின் புறநகர் பகுதியான தெமட்டகொடவில் தாக்குதலாளிகள் மறைந்து தங்கியிருக்கின்றனர் என்று கண்டறியப்பட்டது.

தெமட்டகொட குடியிருப்புப் பகுதி சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. தாக்குதலாளிகள் என்று சந்தேகிப்போரை கைது செய்ய முற்பட்டபோது அவர்கள் குண்டை வெடிக்க வைத்துள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். அதில் 3 பொலிஸார் உயிரிழந்துள்ளனர். ஒரு பெண் மற்றும் இரு சிறுமிகளும் உயிரிழந்தனர். தெமட்டகொடவில் பொலிஸார் சுற்றிவளைத்த வீட்டின் உரிமையாளர், தாக்குதலாளிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டிருந்தார் என்று தெரியவந்துள்ளது.

பொலிஸாரின் விசாரணைகளின் தொடர்ச்சியாக தெமட்டகொடவில் தாக்குதலாளிகள் என்று சந்தேகிக்கப்படும் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு பெண்ணும் உள்ளடங்குகின்றார் என்று கூறப்படுகின்றது. அனைவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும், வெளிநாட்டுக்கு அழைக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

கைதானவர்களிடம் மேற்கொண்ட துரித விசாரணைகளை அடுத்து தாக்குதல் நடத்த திட்டமிட்ட, தாக்குதலாளிகள் தங்கியிருந்து புறப்பட்டுச் சென்ற இடம் தொடர்பான தகவல் பொலிஸாருக்கு கிடைத்துள்ளது. பாணந்துறையில் குறித்த வீட்டை நேற்று இரவு பொலிஸார் சுற்றிவளைத்தனர். அங்கிருந்து 6 பேரைக் கைது செய்தனர்.

இதேவேளை, குண்டுகளை தாக்குதல் நடந்த இடங்களுக்கு கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்டது என்று சந்தேகிக்கப்படும் வாகனத்தையும், அதன் சாரதியையும் பொலிஸார் வெள்ளவத்தையில் வைத்துக் கைது செய்துள்ளனர். (ஒ.5,26,105)

### நீர்கொழும்பு...

தியவர் என்று சந்தேகத்தில் ஒருவரது ஒளிப்படம் சமூக வலை தளங்களில் பகிரப்பட்டுள்ளது.

இந்த நபரே தனது பையில்கொண்டு வந்த குண்டை கட்டுவப்பிட்டிய தேவாலயத்துக்குள் வெடிக்கச் செய்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது. மறைகாணியில் (சிசிரிவி) அவர் குண்டைக் கொண்டு வருவது பதிவாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது. குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற பின்னர் அவரது தலை தேவாலயத்திலிருந்து மீட்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5)

### குண்டு...

னியாவைச் சேர்ந்த இளைஞர் உயிரிழந்துள்ளார் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். வவுனியா பட்டானிச்சூர், ஐந்தாம் ஒழுங்கையைச் சேர்ந்த நெஸ்தார் நலீர் (வயது - 21) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொழும்பு சினமன் கிராண்ட் ஹொட்டலில இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக இறந்த இளைஞனின் உறவினர்கள் கருத்து தெரிவிக்கையில், அவர் ஹொட்டல் முகாமைத்துவம் கற்றுவிட்டுக் குறித்த ஹொட்டலில் பணியாற்றிவந்தார். இந்தநிலையில் குண்டுவெடிப்பில் உயிரிழந்துள்ளார் என்று தெரிவித்தனர். அவரது சடலம் வவுனியாவுக்கு எடுத்துவரப்பட்டு அடக்கம் செய்யப்படும் என்றும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

(த-110)

# இலங்கைக் குண்டு வெடிப்புக்கு உலகத் தலைவர்கள் கண்டனம்

கொழும்பு, ஏப். 22

தலைநகர் கொழும்பு உட்பட 9 இடங்களில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களுக்கு ஐ.நா. பொதுச் சபையின் செயலர் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் தமது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர். மிக மோசமான பயங்கரவாத தாக்குதல் என்று அவர்கள் கண்டித்துள்ளனர்.

இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, பிரிட்டன், பாகிஸ்தான், ரஷ்;யா, பகரேன், கட்டார், யுஏஈ, லெபனான், ஈரான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் கண்டனம் வெளியிட்டுள்ளனர். மேலும் சில நாடுகளின் அயலுறவுத்துறை அமைச்சுக்களும் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளன. (ஒ.5)



## நாட்டில் இடம்பெற்ற தாக்குதல்களுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் கண்டனம்

மன்னார், ஏப். 22

நாட்டின் பல்வேறு இடங்களில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் முழு இலங்கை நாட்டையும் ஏன் முழு உலகையுமே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளன. இதற்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மனுவல் பெர்னான்டோ ஆண்டகை தனது கண்டனத்தைத் தெரிவித்தார்.

அவர் தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

மனித உயிர்களைத் துச்சமென மதித்து, வணக்கத்தலங்களிலும் ஏனைய இடங்களிலும் திட்டமிட்டு நடத்தப்பட்ட இத்தாக்குதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். குறித்த தாக்குதல்களின் போது இறந்தவர்களின் ஆன்மா இளைப்பாற்றிக்காகச் செபிப்பதுடன், காயமடைந்தவர்கள் விரைவில குணமடையவும் இறைவனை வேண்டி நிற்கின்றோம். தம் அன்புக்குரியவர்களை இழந்து ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அனைவருக்கும் இரக்கமுள்ள இறைவன் ஆறுதலை அளிக்க வேண்டுமென மன்றாடுகின்றோம்.

கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்குட்பட்ட கத்தோலிக்க ஆலயங்களான கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திலும், நீர்கொழும்பு கற்றுவப்பிற்றிய புனித செபஸ்தியார் ஆலயத்திலும் மற்றும் மட்டக்களப்பு சீயோன் கிறிஸ்தவ ஆலயத்திலும் இயேசுவின் உயிர்ப்பு விழா ஆராதனையின் போது இடம்பெற்ற இத்தாக்குதல்கள் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளன.

இவ்வேளையில் கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர், குறிப்பிட்ட ஆலயங்களின் பங்குத்தந்தையர்கள் மற்றும் இறைமக்களுக்கும், மட்டக்களப்பு கிறிஸ்தவ சமூகத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம். இத்துன்பமான வேளையில் எமது சகோதரத்துவத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றோம்.

மனிதநேயமற்ற மனிதர்களின் இத்தாக்குதல்களால் ஏதுமறியாத அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அதுவும் வழிபாட்டுத் தலங்கள் இத்தாக்குதல்களுக்கான இலக்குகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இத்தாக்குதல்களின் சூத்திரதாரிகள் யார் என்பதையும் அவர்களின் நோக்கம் என்ன என்பதையும் விரைவான விசாரணைகள் மூலம் அரசு விரைவில் வெளிப்படுத்தும் என நம்புகின்றோம்.

இதுபோன்ற மனுக்குலத்திற்கு எதிரான குற்றச்செயல்கள் தொடர்வதை நாம் அனுமதிக்க முடியாது. இப்படிப்பட்ட துர்ப்பாக்கிய சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இத்தாக்குதல்களுக்கு காரணமானவர்கள் மனம்மாற செபிப்போம் என்றுள்ளது. (ம)

## தொடர் குண்டு வெடிப்பை கண்டிக்கிறது சிவசேனை

யாழ்ப்பாணம், ஏப். 22

கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய நகரங்களில் நடைபெற்ற வன்முறைத் தாக்குதல்களைச் சைவ சமயத்தோர் ஏற்கார், கண்டிப்பர், புறந்தள்ளுவர். இவ்வாறு சிவசேனை அமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் தலைவர், மறவன்புலவு சச்சிதானந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில், வழிபாட்டிடங்களில் அன்பும் அறனும் அருளும் பெருக்கும் நாளில், பெரிய வெள்ளிக்கிழமையைத் தொடர்ந்த குருத்தோலை ஞாயிறன்று அன்று எம் அன்புக்கும் பாசத்துக்கும் மதிப்புக்கும் உரிய கிறித்தவ மக்கள் மனமுருகி வழிபாட்டில் ஈடுபட்டிருக்கையில் ஒன்றும் அறியா அப்பாவிகளை நூற்றுக் கணக்கில் காயமாக்கியும் பலரின் உயிர்களைப் பறித்தும் நிகழ்த்திய தாக்குதல்களைச் சைவ மக்கள் ஒரு பொழுதும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். நெஞ்சார்ந்த இரங்கல்கள். துயரத்தில் பங்கு கொள்கிறோம். காயமுற்றோர் விரைந்து நலமுறச் சிவபெருமான் அருள்வாராக. வழிபடுகிறோம், வேண்டுகிறோம். இரங்குகிறோம் என்றுள்ளது. (ஒ.5)

## சினமன் விடுதியில் நடந்தது என்ன?

கொழும்பு, ஏப். 23

ஐந்து நட்சத்திர ஹோட்டலில் காலை உணவை சாப்பிட வரிசையில் காத்திருந்தபோது, தாக்குதலாளி வெடிகுண்டை வெடிக்கச் செய்ததாகக் கூறப்படுகின்றது.

கொழும்பு சினமன் ஹோட்டலிலும் நேற்றுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அங்கு மேலாளராக பணியாற்றும் நபர், தன் அடையாளத்தை மறைத்து, செய்தியாளர்களிடம் சில தகவல்களை கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முகமது அஸாம் முகமது என்ற நபர், நேற்றுமுன்தினம் இரவு, ஹோட்டலில் அறை எடுத்து தங்கினார். அவன், நேற்று காலை உணவு உண்பதற்காக, ஹோட்டலில் உள்ள, 'டாப்ரோபேன்' என்ற உணவகத்துக்கு வந்தான். ஈஸ்டர் விடுமுறை தினம் என்பதால், காலை உணவு சாப்பிட, ஏராளமானோர் குடும்பத்துடன் உணவகத்தில் காத்திருந்தனர். இங்கு, விருந்தினர்களே, தங்களுக்கு தேவையான உணவுகளை பரிமாறிக் கொள்ளும் முறை பின்பற்றப்படுகிறது. காலை, 8:30 மணிக்கு, உணவகத்துக்குள் வந்த முகமது அஸாம், உணவை பெறுவதற்காக, தட்டுடன் வரிசையில் காத்திருந்தான். நீண்ட நேரம் பொறுமையாக நின்றிருந்தவன், திடீரென, தன் முதுகில் மாட்டியிருந்த பையில் இருந்த வெடிகுண்டை வெடிக்க செய்தான். இதில், பலர் உடல் சிதறி பலியாகினர். துண்டு துண்டாக சிதறிக் கிடந்த அஸாமின் உடல் பாகங்களை, பொலிஸார் எடுத்துச் சென்றனர் - என்றார். (ஒ.5)

## தாக்குதல் திட்டங்களை அறியாது இருந்தீர்களா?

### பாதுகாப்புத்துறையிடம் மாவை எம்.பி. கேள்வி

யாழ்ப்பாணம், ஏப். 22

குண்டுத் தாக்குதல்கள் பற்றிய திட்டமிட்ட நடவடிக்கைகளை உளவுத்துறை, பாதுகாப்புத் துறை அறிந்திருக்கவில்லையா என்பது முக்கிய கேள்வியாக இருக்கிறது. இது பாதுகாப்புத் துறையின் பலவீனமா? அல்லது தெரிந்தும் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்காமல் விடப்பட்டதா? இது பற்றி அரசு நாட்டு மக்களுக்கு உண்மையை அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தற்கொலை தாரிகள் மர்மமான முறையில் நடத்திய குண்டு வெடிப்புக்களுக்கு அனைவரும் கண்டனம் தெரிவிக்க வேண்டும். இத்தகைய சம்பவங்களை எதிர்க்க வேண்டும்.

இந்தச் செய்கைகள் நன்கு திட்டமிடப்பட்ட, மனித குலத்துக்கு எதிரான செயல். அதுவும் மத நம்பிக்கைகளுக்கு எதிரான - கிறிஸ்தவ மதத்தவருக்கு எதிரான கொடிய செயல். உடனடியாக அரசு அவசரகாலச் சட்டத்தை அறிவித்து மக்களைப் பாதுகாக்கவும், உயிருக்குப் போராடுவோருக்கு, காயப்பட்டோருக்கு அவசர சிகிச்சையளிக்கவும். நடவடிக்கை எடுப்பதாக அறிகிறோம்.

கடந்த காலங்களில் அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்திய காலங்களில் பாதுகாவலர்களே அத்துமீறிய சம்பவங்களையும் சுட்டிக்காட்ட வேண்டும். இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ் இளைஞர்களைப் பழி வாங்கவும் இடமளிக்கக்கூடாது. மதங்களுக்கு, இனங்களுக்கு இடையிலான இனவாத, மதவாத வன்முறை நடவடிக்கைகளை அரசும், பன்னாட்டுச் சமூகமும் தடுத்து நிறுத்த வேண்டும்.

மக்களின் மதங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசும், மதத் தலைவர்களும், அரசியல் சமூகத் தலைவர்களும் ஒன்றுபட்டு சமாதானத்தை, அமைதியை ஏற்படுத்தி உறுதிபூண வேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

உயிர்களைப் பலி கொடுத்த குடும்பங்களுக்கும், காயங்களால் பாதிக்கப்பட்டோருக்கும், இழப்புக்களை சந்தித்தோருக்கும் அஞ்சலியையும், அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம் என்றுள்ளது. (கு)

## ரஜினி இரங்கல்

சென்னை, ஏப். 22

இலங்கையில் நேற்று நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு கடும் கண்டனம் விடுத்தார் தென்னிந்திய திரைப்பட நடிகரான ரஜினி.

அவர் தனது கண்டன அறிக்கையில், ஈஸ்டர் திருநாளான இன்று (நேற்று) இலங்கையில் நடந்த இந்த துயரத்தில் பாதிக்கபட்ட மக்களுக்கு ஆறுதல் சொல்ல வார்த்தைகள் இல்லை - என்று மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## மனித நேயம் மீதான தாக்குதல்கள் இவை

### ஒபாமா கண்டனம்



இலங்கையில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் மனிய நேயத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களே என்று தனது கண்டன அறிக்கையைப் பதிவுசெய்துள்ளார் அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பராக் ஒபாமா.

அவர் தனது கண்டன அறிக்கையில், இலங்கையில் கிறிஸ்தவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் மிகுந்த கவலையும் வேதனையும் தருகின்றன. அன்பு, மீட்பு, புதுப்பித்தலுக்கு அர்ப்பணித்த ஒரு நாளில் நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நான் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன் என்று மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## இலங்கை மக்களின் ஒற்றுமையை குலைக்கும் நோக்கில் தாக்குதல்!

### ஐ.நா. சபையில் இலங்கை அலுவலகம் கண்டிப்பு

கொழும்பு, ஏப். 22

இலங்கை மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் நோக்கிலேயே குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று கண்டனம் தெரிவித்தது ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான அலுவலகம்.

அந்த அமைப்பு தனது கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கை - ஐக்கிய நாடுகள் அமைப்பானது உயிர்த் தெழுந்த ஞாயிறன்று வழிபாட்டுத்தலங்கள் மற்றும் விடுதிகளில் பொதுமக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றது. காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும் என்று வேண்டுகிறது - என்றுள்ளது. (ம)

## யாழ்....

தொடர் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் பின்னர் பொலிஸார் தேடுதல் நடவடிக்கை முன்னெடுத்தனர். யாழ்ப்பாணப் பேருந்து நிலையத்தில் சந்தேகத்துக்கு இடமான நபர் ஒருவர் நேற்று மாலை மணிக்கு கைது செய்யப்பட்டுள்ளார். அவர் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர் என்றும், பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ.5.26)

## ஈஸ்ரர் ...

ஆண்டு சோபையிழந்தன. நேற்றுக் காலை ஆலய வழிபாட்டுக்கு மக்கள் உற்சாகமாகச் சென்றாலும், தொடர் குண்டுவெடிப்புக்கள் தொடர்பான தகவல்களை அறிந்த பின்னர் கவலையடைந்தனர். இதனால் ஈஸ்ரர் கொண்டாட்டங்கள் சோபையிழந்தன.

கிறிஸ்தவ மக்கள் 40 நாள் தவக்காலம் முடிந்து, கிறிஸ்து உயிர்ப்பு பெருவிழாவை நேற்றுக் கொண்டாடினர். வடக்கில் உள்ள தேவாலயங்களில் ஈஸ்ரர் வழிபாடுகள் நேற்றுக் காலை இடம்பெற்றன. பெருமளவான கிறிஸ்தவ மக்கள் புத்தாடைகளுடன் பங்கேற்றனர்.

கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் தேவாலயங்களில் வழிபாடுகளின்போது தொடர் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் பலர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 8.45 மணியிலிருந்து 9.15 மணி இடையிலான காலப் பகுதியில் இடம்பெற்றது. இது தொடர்பான தகவல் வேகமாக நாடு முழுவதும் பரவியது. ஆலய வழிபாடுகளில் காலையில் உற்சாகமாகப் பங்கேற்றவர்களும் கவலையடைந்தனர். அத்துடன் பாதுகாப்புக் கருதி வழிபாடுகளிலிருந்து வேகமாக வெளியேறினர். (ஓ.5.23)

## கட்டுநாயக்காவில்...

வானூர்தித் தளத்துக்கு அண்மையாக வீதியில், பி.வி.சி. குழாயினுள் பொருத்தப்பட்டிருந்த சக்தி வாய்ந்த குண்டு கண்டுபிடிக்கப்பட்டு நேற்று இரவு செயலிழக்கச் செய்யப்பட்டது. நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் தொடர் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்று 228பேர் உயிரிழந்திருந்த நிலையில் இந்தக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது. (ஓ.5.26)

## பதினொருவரைத்...

தொடர்பில் தீவிர விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 7 பேர் நேற்றைய தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர், 13பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் எஞ்சிய 11பேர் தொடர்பாக தேடுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

இலங்கையைச் சேர்ந்த 31பேர் வெளிநாடுகளுக்கு அழைக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு இலங்கைக்கு திரும்பியுள்ளனர். அவர்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய பட்டியல் இலங்கை தேசிய புலனாய்வுச் சேவையால் பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் 7பேர் நேற்றைய தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர். எஞ்சியவர்களில் 13பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 11பேர் எங்கிருக்கின்றனர் என்பது தொடர்பில் பொலிஸார் தேடுதல்களை ஆரம்பித்துள்ளனர். (ஓ.5.105)

## தாக்குதல்...

சேவை முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்திய உளவுப் பிரிவும் இலங்கை அரசை நேரத்துடன் அறிவுறுத்தியிருந்தது என்றும் நேற்றுத் தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை அரச தேசிய புலனாய்வுச் சேவை, இலங்கையில் தொடர் தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்படுகின்றது என்று கடந்த 11ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சுக்கு அறிக்கையிட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சு அது தொடர்பான நடவடிக்கைகளை எடுத்திருந்தது. நாடாளுமன்றம், அரச தலைவர் செயலகம் உள்ளிட்ட இடங்களில் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, காத்தான்குடியில் கடந்த 16ஆம் திகதி இடம்பெற்ற சிறு குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து இந்திய உளவுப் பிரிவு இலங்கை அரசை எச்சரித்திருந்தது. நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இவ்வாறான குண்டுத் தாக்குதல்கள் நடத்த திட்டமிடப்படுகின்றது என்று அறிவுறுத்தியிருந்தது.

இதேபோன்று, மேற்கு நாட்டுத் தூதரகத்தின் தூதுவர் ஒருவர், இலங்கை அரசின் உயர் பீடங்களுக்கு குண்டுத் தாக்குதல் தொடர்பான எச்சரிக்கையை கடந்த வியாழக்கிழமை தெரிவித்துள்ளார்.

இவ்வாறு எச்சரிக்கை கிடைக்கப் பெற்றும் அது தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லையா என்பது தொடர்பாகவும், குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணை மேற்கொள்ளும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, குண்டுத் தாக்குதல் தொடர்பான முன்னெச்சரிக்கை எதுவும் அமைச்சரவைக்குக் கிடைக்கவில்லை என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று இரவு இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். (ஓ.5)

## அவசரமாக...

கொழும்பு, ஏப்.23

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை காரணமாக நாளை நாடாளுமன்றம் அவசரமாகக் கூடவுள்ளது.

நேற்று நாட்டில் பல இடங்களில் குண்டு வெடிப்புக்கள் நடந்தன. அதில் 228 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்திருந்தனர். அதையடுத்தே நாடாளுமன்றம் அவசரமாகக் கூட்டப்பட்டுள்ளது.(எ)

## வெளிநபர்கள்...

வந்து தங்கி வாழும் நபர்களின் விவரங்களைத் திரட்டுமாறு பொலிஸாருக்கு பாதுகாப்புப் பிரிவு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்று குண்டு வெடிப்புத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். பொலிஸ் ஊரடங்கு அறிவித்தல் நேற்று பிறக்கப்பட்டு சோதனை நடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் வடக்கு பிரதேசத்தை வதிவிடமாக கொண்டிராத நபர்கள் யாரும் இங்கு தங்கியிருந்தால் அவர்களின் விவரங்களை சேகரிக்க வேண்டும். அத்துடன் பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-726)

## நியூஸிலாந்துப்...

பழிவாங்கும் நோக்குடனேயே இலங்கையில் தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டனவா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் 8 இடங்களில் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நியூஸிலாந்தில் மார்ச் 15ஆம் திகதி பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. 52 முஸ்லிம்கள் உயிரிழந்திருந்தனர். இந்தத் தாக்குதல் இடம்பெற்ற சில நாள்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தேவாலயங்கள் மீது பதில் தாக்குதல் நடத்தப்படும் என்று காணொலி ஊடாக எச்சரித்திருந்தது. இலங்கையை இலகு இலக்காக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு எடுத்துக் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளதா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தத் தகவலை, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்ற உயர் மட்டக் கூட்டத்தில் பொலிஸ்மா அதிபர் தெரியப்படுத்தியிருந்தார் என்று அறியமுடிகின்றது. (ஓ.5)

## ஐ.எஸ்.ஐ.எஸ்...

தேவாலயங்கள் மற்றும் உல்லாச விடுதிகளை இலக்கு வைத்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் 8 இடங்களில் இந்தத் தாக்குதல்களை நடத்தினர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கொல்லப்பட்டவர்களில் 32 பேர் வெளிநாட்டவர்கள். மூவர் பொலிஸார். 500க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். நாட்டையே உலுக்கிய இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து நேற்று மாலை முதல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

யேசுவின் உயிர்த்த ஞாயிறு தினத்தைக் கிறிஸ்தவர்கள் கொண்டாடிக் கொண்டிருந்த போது தேவாலயங்களில் தற்கொலையாளிகள் தாக்குதலை நடத்தினர் என்று பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன. மிக மோசமான இந்தத் தாக்குதல்களால் தேவாலயங்கள் கொலைக் களங்களாகக் காட்சியளித்தன. இறந்தவர்களின் உடல்கள் எங்கும் சிதறிக் கிடந்தன. கூரை ஓடுகள் நொறுங்கி வீழ்ந்திருந்தன. காயமடைந்தவர்களினதும் ஏனையவர்களினதும் ஓலங்களால் அந்த இடங்கள் நிரம்பிக்கிடந்தன. மேலும் 3 தாக்குதல்கள் நட்சத்திர உல்லாச விடுதிகளில் இடம்பெற்றது. அவற்றில் ஒன்றில் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டதைப் பொலிஸார் உறுதிப்படுத்தினர். மற்றொன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது என்றும் அவர்கள் தெரிவித்தனர். மூன்றாவது விடுதியில் இடம்பெற்றது தற்கொலைத் தாக்குதலா அல்லது குண்டுத் தாக்குதலா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

தற்கொலைத் தாக்குதல்கள் உட்படக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன என்பதை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தனவும் பொலிஸ் பேச்சாளரும் ஊடகங்களிடம் உறுதிப்படுத்தினர்.

தாக்குதலை நடத்தியோர் குறித்து பொலிஸாரோ, ஆட்சியாளர்களோ, படைத்துறையினரோ உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் வெளியிடவில்லை. எனினும் ஈராக் மற்றும் சிரியாவுக்கான இஸ்லாமிய அரசு என்கிற தீவிரவாத அமைப்பின் இலங்கை உறுப்பினர்களே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று பொலிஸ் மா அதிபர் உறுதிப்படுத்தியிருக்கிறார். தாக்குதல் தொடர்பில் நாட்டின் அரசியல் தலைவர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் நேற்றிரவு நடைபெற்றது. அதிலேயே பொலிஸ் மா அதிபர் இந்தத் தகவலைத் தெரிவித்தார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார்.

### நீர்கொழும்பில் முதல் தாக்குதல்

நீர்கொழும்பு கட்டுவபிட்டி புனித செபஸ்ரியன் தேவாலயத்தில் காலை 8.45 மணியளவில் முதல் தாக்குதல் இடம்பெற்றது. உயிர்த்த ஞாயிறு ஆராதனைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது திடீரென பெரும் ஓசையுடன் வெடிப்புச் சத்தம் கேட்டதாகவும் அந்த இடமே அதிர்வுக்குள்ளாகி தாம் தூக்கி வீசப்பட்டனர் என்றும் உயிர் தப்பியவர்கள் தெரிவித்தனர். வீழ்ந்து கிடந்த தம் மீது பொல பொல வென கூரை ஓடுகளும் பாரமான வேறு பொருள்களும் வீழ்ந்தன என்றும் அவர்கள் கூறினர். கதிகலங்கிப்போன மக்கள் கூட்டம் கூச்சலிட்டவாறு தேவாலயத்திலிருந்து தப்பி வெளியேற முண்டியடித்தபோது பலரது உடல்கள் அங்கே வீழ்ந்து கிடப்பதையும் பல உடல் பாகங்கள் ஆங்காங்கே சிதறிக் கிடப்பதையும் தாங்கள் கண்டனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

குண்டுகள் நிரம்பிய பொதியை எடுத்து வந்த ஒருவர்அதனைத் தேவாலயத்தின் உள்ளே வெடிக்க வைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்தத் திடீர் குண்டுவெடிப்பால் ஆலயத்தின் இருக்கைகள், கூரைகள் என்பன சுக்கு நூறாக வெடித்துச் சிதறின. ஆலயத்தின் சொரூபங்களும் நொருங்கின. நொடிப் பொழுதில் எல்லாமும் முடிந்து விட்டது என்கின்றனர் அங்கிருந்தவர்கள். இந்தத் தாக்குதலில் 112 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 105 பேரின் சடலங்கள் நீர்கொழும்பு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. 7 பேரின் சடலங்கள் ராகம மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

### கொச்சிக்கடை

நீர்கொழும்பில் தாக்குதல் இடம்பெற்ற சிறிது நேரத்தில் கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் இரண்டாவது குண்டு வெடித்தது. பூசை வழிபாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது, ஆலயத்தினுள் ஓடி வந்த தற்கொலைதாரி குண்டை வெடிக்க வைத்தார் என்று அங்கு பூசை மேற்கொண்ட மதகுரு ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் திடீர் தாக்குதலால் ஆலயம் நிலைகுலைந்ததுடன் பெரும் கரும்புகை அந்தப் பகுதியில் வெளிக்கிளம்பியது. மக்கள் பதறியடித்து வெளியில் ஓடினர். காயமடைந்தவர்களை நோயாளர் காவுவண்டிகளில் ஏற்றிச் சென்றனர்.

கொழும்பு நகர வீதிகள் எங்கும் நோயாளர் காவு வண்டியின் ஓசைகளே கேட்டுக் கொண்டிருந்தன. போர்க் காலங்களில் இருந்ததைப் போன்ற பதற்றம் கொழும்பு நகர் எங்கும் பரவியிருந்தது. மக்கள் அச்சத்தில் மூழ்கியிருந்தனர். இந்தத் தாக்குதலில் 70 பேர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பில் அமைந்துள்ள சியோன் தேவாலயத்தில் காலை 9 மணிக்கு அடுத்த குண்டுவெடித்தது. தற்கொலைதாரி என்று நம்பப்படும் நபர் ஒருவர் ஆலயத்தினுள் புகுந்து 'உமர்' என்று கத்தியவாறு குண்டை வெடிக்க வைத்தார் என்று தாக்குதலில் தப்பிய ஒருவர் குறிப்பிட்டார்.

குறித்த நபர், ஆலய வழிபாடு எத்தனை மணிக்கு ஆரம்பமாகும் என்ற விவரங்களை அங்கிருந்தவர்களிடம் கேட்டிருந்தார் என்றும் கூறப்படுகின்றது. சில நிமிட நேரங்களில் நேர்ந்த இந்தப் பேரிடர் காரணமாக வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த சிறுவர்கள் உள்ளிட்ட 28 பேர் உயிரிழந்தனர்.

### உல்லாச விடுதிகளும் இலக்கு

கொழும்பு நக்ரிலுள்ள முக்கிய நட்சத்திர உல்லாச விடுதிகளான சங்கரில்லா, சினமன், கிங்ஸ் பெரி ஆகியவற்றிலும் சமநேரத்தில் குண்டுகள் வெடித்துள்ளன. சி4 ரகத்தைச் சேர்ந்த 25 கிலோ வெடிபொருள்களை, ஹோட்டல்களின் வரவேற்பு அறை, வராந்தாவில் வைத்து வெடிக்க வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். ஹோட்டல்களில் பெரும் சத்தத்துடன் அவை வெடித்துள்ளன. ஹொட்டல்களில் தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட பலர் உயிரிழந்தனர்.

தாக்குதலாளி நேற்றுமுன்தினமே ஹோட்டல்களில் அறையை முற்பதிவு செய்து அங்கு தங்கியிருந்தனர் என்று தமது முதல்கட்ட விசாரணைகளில் அறிந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். குண்டுவெடிப்புக் களை அடுத்து ஹோட்டல்களில் தங்கியிருந்தோர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். இந்தத் தாக்குதல்களில் 32 வெளிநாட்டவர்கள் உயிரிழந்தனர்.

### மதியம் தாக்குதல்

காலையில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல்கள் காரணமாக நாடே அதிர்ச்சியில் மூழ்கியிருந்தது. இந்த நிலையில் நேற்று மதியம் தெஹிவளை மிருகக்காட்சிச்சாலைக்கு அருகிலுள்ள விடுதியில் திடீரென குண்டு வெடித்துள்ளது. இதில் இருவர் உயிரிழந்தனர். தற்கொலைதாரி குண்டை வெடிக்க வைத்தார் எனப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இதைத் தொடர்ந்து தெமட்டகொடவிலும் குண்டுவெடிப்பு இடம்பெற்றது. தாக்குதலாளிகள் என்று சந்தேகிக்கப்படுவர்களை தெமட்டகொடவில் இருந்த ஒரு வீட்டில் கைது செய்யச்சென்றபோது, அவர்கள் குண்டுவெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும். இதில் பொலிஸாரும் உயிரிழந்தனர் என்று கூறப்படுகின்றது.

### கூட்டம்

இந்தத் திடீர் தாக்குதல்களைத் தொடர்ந்து உயர்மட்டக் கூட்டம் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலையைமில் அலரி மாளிகையில் நேற்று இரவு இடம்பெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, சபாநாயகர் கரு, கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அமைச்சர் ரவூப் ஹக்கீம், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்தக் கூட்டம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்ததாவது: நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை தொடர்பில் பொலிஸ்மா அதிபர் விளக்கமளித்தார். இந்தத் தாக்குதல்களை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பே மேற்கொண்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று கூறினார். தாக்குதலை நடத்தியவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். தாக்குதல் நடத்திய குழுவின் வலைப் பின்னலைத் தாம் கண்டுபிடித்துள்ளனர் என்றும் தெரிவித்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார்.

### பாதுகாப்பு

தொடர் தாக்குதலைத் தொடர்ந்து நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. முப்படையினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நேற்று மாலையில் இருந்து மறுஅறிவித்தல் வரையான பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பொலிஸார், முப்படையினர் சகல வீதிகளிலும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

(உ.ஓ.5,26,105,22)

# எல்லா தீவிரவாதத்தையும் இந்தியா கண்டிக்கின்றது

கொழும்பு, ஏப். 22

இலங்கையில் இடம்பெற்றுள்ள மோசமான குண்டுத் தாக்குதல்களை இந்தியா வன்மையாகக் கண்டித்துள்ளது. இதுதொடர்பாக இந்திய அயலுறவுத்துறை அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது.

'பல பொதுமக்கள் கொல்லப்படுவதற்கும் பலர் காயமடைவதற்கும் காரணமான குண்டுத் தாக்குதல்களை வன்மையாக கண்டிக்கிறோம்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் இலங்கை அரசுக்கு எமது ஆழ்ந்த வருத்தங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். தாக்குதல்களில் காயமடைந்தவர்கள் விரைவாக குணமடைய வாழ்த்துகிறோம். எல்லா வடிவங்களிலுமான தீவிரவாதச் செயல்களையும் இந்தியா எப்போதும் எதிர்த்து வருகிறது. எல்லை கடந்த தீவிரவாதம் உள்ளிட்ட தீவிரவாதத்துக்கு எதிராக பன்னாட்டுச் சமூகம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று இந்தியா கோருகிறது. எந்தவொரு தீவிரவாதச் செயலையும் எவரும் நியாயப்படுத்த முடியாது.

கோரமான மிகவும் வெறுக்கத்தக்க இந்தச் செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் மற்றும் அவர்களுக்கு ஆதரவாக இருந்தவர்களை துரிதமாக நீதியின் முன் நிறுத்தக் கோருகிறோம். இந்த இக்கட்டான தருணத்தில் இலங்கை அரசுடனும் மக்களுடனும் நாங்கள் இணைந்திருக்கிறோம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியும், இந்திய குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்தும், இந்தத் தாக்குதல்களை வன்மையாக கண்டிப்பதாகவும், கீச்சகப் பதிவுகளை வெளியிட்டுள்ளனர்.

(ஒ.5)

## தாக்குதல்களுக்கு திரேசா கண்டனம்

லண்டன், ஏப். 22

இலங்கையில் நேற்று நடத்தப்பட்ட தொடர் குண்டு வெடிப்புத் தாக்குதல்களுக்கு பிரிட்டன் தலைமை அமைச்சர் திரேசா மே கடும் கண்டனம் தெரிவித்தார்.



அவர் தனது கண்டன அறிக்கையில்,

இலங்கையில் உள்ள தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் உண்மையில் பயங்கரமானவை. இந்தத் துயரமான நேரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள். அச்சத்தால் எவரும் தமது விசுவாசத்தை இழக்க வேண்டியதில்லை - என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ம)

## இலங்கைக்கு துணைநிற்போம்

### ட்ரம்ப் இரங்கல்

வொஷிங்டன், ஏப். 22



இலங்கையில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது இரங்கலைத் தெரிவித்தார்.

அவர் தனது இரங்கல் குறிப்பில் இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல்கள் பயங்கரமானவை. இதற்கு அமெரிக்க தனது இரங்கலைத் தெரிவிக்கின்றது. இலங்கைக்கு உதவுவதற்கு அமெரிக்கா தயார் நிலையில் உள்ளது - என்று குறிப்பிட்டுள்ளார்.

(ம)

## இலங்கையுடைய நிலமைகளை உன்னிப்பாக அவதானிக்கிறோம்

### இந்தியர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 22

இலங்கையின் நிலமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இலங்கையில் நேற்றுக் காலை அடுத்தடுத்து நிகழ்ந்த குண்டுவெடிப்புகளை அடுத்து, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. 'கொழும்பிலும் மட்டக்களப்பிலும் பல்வேறு இடங்களில் குண்டுகள் வெடித்துள்ளன. இலங்கையின் நிலமைகளை உன்னிப்பாக அவதானித்து வருகிறது' என்று அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள் ளது.

இலங்கையில் நிகழ்ந்த குண்டுவெடிப்புகளை அடுத்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவருடன் தொடர்பில் இருப்பதாகவும் நிலமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், இந்திய அயலுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கீச்சகப் பதிவிட்டுள்ளார்.

(ஒ.5)



## உங்களை நாம் நேசிக்கின்றோம்

### இலங்கை மக்களுக்கு கனேடிய அதிபர் இரங்கல்

ஒட்டாவா, ஏப். 22

இலங்கை மக்களையும், தாக்குதலுக்கு உள்ளானவர்களையும் அவர்களின் குடும்பங்களையும் நாம் நேசிக்கின்றோம். கனடா உங்களுடனிருக்கும் என்று தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டார் கனேடியத் தலைமை அமைச்சர் ஜஸ்ரின் டுடேர்தே.

அவர் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கையில் இருந்து முற்றிலும் ஒரு கடினமான செய்தி. கிறிஸ்தவ தேவாலயங்களிலும், ஹோட்டல்களிலும், கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும் நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் கண்டிக்கத்தக்கது. எங்கள் இதயங்களும், எண்ணங்களும் உங்களுடன் இருக்கும் - என்றுள்ளது.

(ம)

## பன்னாட்டு கிரிக்கெட் வீரர்களும் கண்டனம்

கொழும்பு, ஏப். 22

இலங்கையில் நேற்று இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதலுக்கு இலங்கை, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் இந்நாள் மற்றும் முன்னாள் கிரிக்கெட் வீரர்களும் கடும் கண்டம் வெளியிட்டுள்ளனர்.

ஆஸ்திரேலிய அணி வீரர் ஆரோன் பிஞ்ச், நியூஸிலாந்து அணி வீரர் பிரண்டன் மக்கலம், இந்திய கிரிக்கெட் அணி வீரர்களான ரோகித் சர்மா, சிகர் தவான், சச்சின் டெண்டுல்கார், விராட் கோலி, தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி வீரர் டேல் ஸ்ரெய்ன், பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் மொஹமட் ஹபீஸ், இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களான திமுத் கருணாரட்ன, அஞ்சலோ மத்தியூஸ், குசல் மெண்டிஸ், டனுசன் சானக, குமார் சங்ககார, மகேல ஜெயவர்தன, சமிந்த வாஸ், உப்புல் தரங்க, ஜெப்ரி வண்டர்சி ஆகியோர் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

(ஒ.5)

## புலனாய்வுப் பிரிவின் அசமந்தமே காரணம்!

### இது பெரும் அவமானம் என்றும் ரஹ்மான் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 22

நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களுக்குப் புலனாய்வுப் பிரிவின் அசமந்தப் போக்கே காரணம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றஞ்சாட்டியுள்ளார்.



குண்டுவெடிப்பு இடம்பெற்ற கொட்டாஞ்சேனை அந்தோனியார் ஆலயத்துக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

நாட்டில் இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெறுவது, முன்கூட்டியே புலனாய்வுப் பிரிவுக்குத் தெரியாமல் போனது அவமானம் என்றும் சாடியுள்ளார். இது வெறுக்கத்தக்க விடயம். புலனாய்வுப் பிரிவின் தலைவர் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

(த)

## கொடூரமானவை

### இம்மனுவல் மக்ரோன் கண்டனம்



இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் கொடூரமானவை என்று தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் பிரான்ஸ் அதிபர் இம்மனுவல் மக்ரோன்.

அவர் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் கொடூரமானவை. இதற்காக பிரான்ஸ் மக்களாகிய நாம் மிகவும் வருத்தப்படுகின்றோம். இந்தத் தாக்குதல்களை நாம் கண்டிக்கின்றோம் - என்றுள்ளது.

(ம)

## சதிகாரர்களின் நோக்கத்தை கண்டறிய ஒத்துழையுங்கள்

### சபாநாயகர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 22

நாட்டின் பல்வேறு பகுதிகளில் குண்டு வெடிப்புச் சம்பவங்களை நிகழ்த்தியுள்ள சதிகாரர்களின் நோக்கத்தை அறிய, அனைவரும் உதவ வேண்டுமென்று சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

வெடிப்புச் சம்பவங்கள் குறித்து வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையில் கருஜயசூரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

"நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் 160க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 350க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தால் நாட்டிலுள்ள அனைத்து மக்களும் சோகத்தில் உள்ளனர். சம்பவம் தொடர்பில் சிலர் வதந்திகளைப் பரப்பி வருகின்றனர்.

இதனை யாரும் நம்ப வேண்டாம். சதி காரர்களையும் அவர்களின் நோக்கம் குறித்தும் அறிவதற்கான விசாரணைக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

நாட்டிலுள்ள அனைத்து மக்களும் அமைதியாகவும் அவதானமாகவும் இருக்க வேண்டும் என்று சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

(த)

## குண்டு வெடிப்புக்கு ராகுல் இரங்கல்


புதுடெல்லி, ஏப். 22

இலங்கைக் குண்டு வெடிப்பு தொடர்பான செய்திகள் மிகவும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. பயங்கரவாதத்தின் கொடூரமான இந்தச் செயலுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கிறேன் என்று அறிக்கை விடுத்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி.

அவர் தனது அறிக்கையில், உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு என்னுடைய இரங்கலைத் தெரிவிக்கிறேன். காயம் அடைந்தவர்கள் விரைந்து குணம் அடைய இறைவனிடம் பிரார்த்தனை செய்கிறேன் என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ம)

## மரண அறிவித்தல்



மலர்வு 07 06 1927

உதிர்வு 15 04 2019

# திருச்செல்வம் அல்பேட் அன்ரனி

**(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர் - யாழ்ப்பாணம்)**

யாழ்ப்பாணம் சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் அல்பேட் அன்ரனி 15.04.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருச்செல்வம் - றோசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - லில்லி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ் சென்ற தவமணிகெலனின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை, பூமணி - எட்மன், இராசமணி - அல்பிரட், சின்னமலர்- செபஸ்தி யாம்பிள்ளை, செபஸ்தியாம்பிள்ளை, அருள்நாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், புளரின்மரினா, காலஞ்சென்ற Dr.காமலின்திலகா மற்றும் ரவிராஜ்யூட் ஆகியோரின் தந்தையும், திலகரெட்ணம், அலெக்சான்டர் ஆகியோரின் மாமனாரும், Dr.சிந்துஜா - டிலோஜ் (ஆஸ்திரேலியா), நிர்மலராஜ் (பொறியியலாளர், Tokyo cement), Dr.டினேஸ் (UK),அன்று ஆகியோரின் பேரனும், ஆரோன், ஆதர்சன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (22.04.2019) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புனித யுவானியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.10, மடம்வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: மருமகன்**
**R.A திலகரட்ணம்.** (இளைப்பாறிய ஆசிரியர்)

(CS/24870) (11,17)

**021 222 5663, 077 923 9362**

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியில் நீண்ட காலம் தன்னலம்
கருதாமல் அர்ப்பணிப்புடன் ஆசிரியராக சிறப்பாக சேவையாற்றிய

# நாகச்சந்திரன் சிவச்சந்திரன்

அவர்களின் திடீர் மறைவு எமக்கு பேரதிர்ச்சியையும் ஆழ்ந்த துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஆறாத்துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வது டன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவஞான வைரவப் பெருமானையும் ஞானலிங்கேஸ்வரப் பெருமானையும் வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி !

ஆசிரியர் கழகம்
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

# மரண அறிவித்தல்

# தாமோதரம்பிள்ளை தர்மலிங்கம்

**(ஓய்வுபெற்ற பிரதம தபால் அதிபர்)**



யாழ்.பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் இல.50 கே.கே.எஸ். வீதி, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை தர்மலிங்கம் அவர்கள் கடந்த (19.04.2019) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-தங்கச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வரதரட்ணராஜா-பூலோகநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தர்மநாயகி அவர்களின் அன்புக் கணவரும் திகழ்மதி (USA), ஜலஜா (Canada), லலிதினி(USA), சிவகுமார்(Norway), விக்கினேஸ்வரன் (Australia), கிருஷ்ணகுமார்(UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற குலேந்திரன்(V.M.K), பாலச்சந்திரா(Canada), கிருஷ்ணதாசன்(USA), தேவசேனை (Norway), ரோகினி(Australia), சாந்தி(UK) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான M.T.சுப்பிரமணியம், M.T.பொன்னம்பலம், தங்கம்மா, மனோண்மணி, M.T.திருநாவுக்கரசு, பராசக்தி, M.T.நடராஜா, M.T.சோமசுந்தரம் மற்றும் M.T.துரையப்பா அவர்களின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இலட்சுமிப் பிள்ளை, ஞானலட்சுமி, கதிரவேற்பிள்ளை, செல்லையா, சுகீர்தலிங்கம், மங்கையற்கரசி மற்றும் தனலட்சுமி, ராஜபூபதி, நாகபூபதி, காலஞ்சென்ற மகேஸ்வரன், மற்றும் ஸ்ரீகரன், குணசீலன், சோபனதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கார்த்திகா-சஞ்ஜீவ், அபராஜிதன்(V.M.K)-சர்மினா, பிரசோதிகா, மயூரிக்கா, தினேசியா, டர்சியா, அபிரா, வராகி, ஆர்த்திகா, அகினாஷ், அக்ஷி ஆகியோரின் அன்புப் பேரனும் மானவ், ஷ்ரவன் ஆகியோரின் ஆசைப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(22.04.2019) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் இல 50, கே.கே.எஸ்.வீதி, கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.50, கே.கே.எஸ்.வீதி,**
**கொக்குவில்.**

தொ.பேசி: 021 222 8063, 0777849369 (அபராஜிதன்-பேரன்)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**




BLC CAMPUS

4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666

E-mail: info@blccampus.com
Web: www.blccampus.com



## துரித தபால்கள் பொதிகள் சேவை

எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில் 11 Kg இற்கு மேற்பட்ட பொதிகளுக்கு

| | |
|---|---|
| UK | - 600/= |
| Germany | - 700/= |
| France | - 700/= |
| Canada | - 1000/= |
| Australia | - 975/= |

**திருமுருகன் கொம் நெற்**
கொழும்பு, யாழ்ப்பாணம்,
திருநெல்வேலி, நெல்லியடி,
கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார்.
Hotline : 0777 55 45 28



கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA

சீட்டிழுப்பு வாரம்: 432 சீட்டிழுப்பு திகதி: 2019.04.19
வர்ணம்: செம்மஞ்சள் வெள்ளிக்கிழமை

R 20 58 64 69

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

2019.04.21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு பச்சை நிற டிக்கெட்டுக்கள் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.



SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 958
சீட்டிழுப்பு திகதி 2019.04.20 சனிக்கிழமை

H 14 21 42 51

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

மஞ்சள், பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்; வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 29 . 12 . 1949



இறப்பு 19 . 04 . 2014

**கதிர்காமு உமாமகேஸ்வரன் (அழகு)**

திதி: சங்கடஹரசதுர்த்தி

அப்பா! அப்பா! என நாம்
அழைத்த குரல் ஓய்ந்ததம்மா
ஆண்டுகள் ஐந்து அல்ல – நாம்
வாழும் காலம் எல்லாம் – அப்பா
உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சை விட்டு அகலாது

சங்கத்தானை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.


## காசி யாத்திரை

ஆரம்பம் : 15.05.2019 | யாத்திரீகர் : 10 | நாள்கள் : 10

**தரிசிக்கும் இடங்கள்:**
டெல்லிநாராயணர் கோயில் வேறு இடங்களும் காசியில் 15 இடங்கள், கங்காபூசை, கயா, புத்தகயா, அலகாபாத், (கங்கா, யமுனா, சரஸ்வதி) திருவேணிசங்கமம், சீத்தாமடி, ஆக்ரா(தாஜ்மகால்), மதுரா கிருஷ்ண ஜென்மபூமி, பிரேமந்திர், பிரமாண்டமான கிருஷ்ணர் கோயில், செங்கோட்டை, இராமேஸ்வரம், உத்திர கோசமங்கை, திருப்புலானி, நவபாஷானம், பஞ்சமுக ஆஞ்சநேயர், அப்துல்கலாம் மணிமண்டபம், மதுரை மீனாட்சி அம்பாளையும் தரிசிக்கலாம்.

**ஒரு நாள் சென்னையில் சொப்பிங்**

**பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை**

4 விமான பயணடிக்கட், மூன்று வேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, குடிநீர் 2 பேருக்கு, வெஸ்ரன் கொமட், குளியலறை, இணைந்த அறைகள், பயணம் முழுவதும் A/C வாகன வசதி, யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரவும் திரும்ப யாழ் செல்லவும் வாகன வசதி ஒழுங்குகள் செய்து தரப்படும். பதிவு செய்யவும்.

“சென்றவர்களைக் கேளுங்கள், சென்று வரலாம் வாருங்கள்”

**கலாநிதி. T. ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்**
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11
077 768 0102/ 077 736 2154
Email: Sriranganathan2601@gmail.com

(IN 9608) (14.17)


## மரண அறிவித்தல்

### செல்வி சிவகௌரி சிவானந்த சர்மா (வதனி)

காரைநகர் மணற்காட்டைப்பிறப்பிடமாகவும் இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சிவகௌரி சிவானந்த சர்மா நேற்று (21.04.2019) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் சிவானந்த சர்மா அமரர்பூரண சந்திரிகாதம்பதிகளின் அன்பு மகளும் சிவரூபசர்மாவின் (ரூபன், லண்டன்) பாசமிகு சகோதரியும் நந்தினியின் அன்பு மைத்துனியும் அக்ஷயா, அபினாயா, அனன்யா, ஆகியோரின் ஆசை அத்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2019) திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு பவாநிவாசம் காரைக்கால் வீதி, இணுவிலில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
பிரம்மஸ்ரீ சாம்பசிவ சிவானந்தசர்மா (தந்தை)
077 315 2602

பவா நிவாசம்,
காரைக்கால்வீதி, இணுவில்.


## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.